# கட்டுமரத்தில் கடலில்சென்ற வங்கிஊழியர் எங்கே? 5 நாட்களாகியும் காணவில்லையாம்

Registered as a News pa er In Ceylon விலை சதம் 15

ஈழநாடு
சந்தா
தினப்பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு
THE EELA NADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 224
தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் புரட்டாதி 8 றஜப் 11 புதன்கிழமை [24-9-69]

யாழ்ப்பாணம், புதன்

கடலில் காற்று வாங்கக் கட்டுமரம் ஒன்றில் சென்றதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்திலுள்ள வங்கியொன்றில் கடமையாற்றும் ஊழியரான வாலிபர் ஒருவர் ஐந்துநாட்களாகியும் இன்னும் திரும்பவில்லையாம்

இவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியிலும் இவர் பிரயாணம் செய்த கட்டுமரத்தைத் தேடும் முயற்சியிலும் கடற்படையினரும் பொலிசாரும் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 'என்னைத் தேடவேண்டாம்' என இவர் தனது வீட்டுக்கு தபால் அட்டை ஒன்றை அனுப்பிவைத்ததாகக்கிடைத்த தகவல் பொலிசாரைப் பெரும் பரபரப்பில் ஆழ்த்தியுள்ளது. வீட்டிலிருந்து காணமல் போன தினத்தன்று இவர்கீரிமலையில் மது போதையில் காணப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாம்.

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் வசிக்கும் கனகரத்தினம் யோகசுந்தரராஜா என்ற இந்த ஊழியரை உடனடியாக வேலைக்குவரும்படி வங்கி மனேஜர் அவசரத் தந்தி ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளாராம்.

இவரைத் தேடும் முயற்சி ஒருபுறமும், எவ்வாறு காணமல் போனார் என்பதற்கான விசாரணை மறுபுறமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(கா. நி.)

## தீர்மானம்

பச்சிலைப்பள்ளி, செவ். கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கக்கூட்டம் ஆசிரியர் திரு. தா. அருளானந்தம் தலைமையில் நடைபெற்றபோது பாடசாலைக்குத் தேவையான முக்கிய தேவைகள் குறித்து வடமாநிலக் கல்வியதிகாரி வட்டாரக்கல்வி அதிகாரி, ஆட்சிமன்றப பிரதிநிதி ஆகியோரைக் கேட்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சைவத் தொண்டர் தேசிக மணி மறைவு

யாழ்ப்பாணம், புதன்

மட்டக்களப்பு சைவத் தொண்டர் தேசிகமணி சைவப் புலவர் கா. அருணசல ஆசிரியர் 'காலமாகி விட்டார்.

சுவாமி விபுலானந்தர், வித்துவான் சரவணமுத்து, புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை முதலிய பெரியார்களுடன் இணைந்தும் தனித்தும் சைவத் தொண்டு புரிந்து வந்தவர் திரு அருணசலம்.

கிராமங்கள் தோறும் சைவப் பிரசங்கங்கள் நிகழ்த்தியும் பாடசாலைகளை ஸ்தாபித்தும் நூல்களை எவதியும் அவர் நற்சேவை புரிந்தார்.

திரு. அருணசலத்தின் மறைவு சைவ உலகுக்கு பேரிழப்பு.

யாழ்ப்பாணத்தில்

## இன்று சித்திரக் காட்சி

யாழ்ப்பாணம், புதன்

ஆசிரியர் சித்திரப்பயிற்சி வகுப்பு நிறைவுவிழாவும் சித்திரக் காட்சியும் இன்று யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள யாழ். அரசினர் கலைக் கூடத்தில் நடைபெறவிருக்கின்றன. பயிற்சி வகுப்பு விழா காலை 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். சித்திரக்காட்சி காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும். பிரதம விருந்தினராக வடபகுதி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் கலந்துகொள்வார்.

சாவகச்சேரி, மானிப்பாய், அச்சுவேலி, நல்லூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வந்த சித்திரப் பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர்களால் வரையப்பட்ட 500 சித்திரங்கள் சித்திரக் காட்சியில் இடம்பெறும். இவ்விழாவுக்கான சகல ஒழுங்குகளையும்வடமாகாண சித்திர வித்தியாதிகாரியான கலாகேசரி ஆ. தம்பித்துரை மேற்கொண்டுள்ளார்.

# "ஆசிரியர் இடமாற்றத்தை அடியோடு ஒழிக்கவேண்டும்"

## கண்டனக் கூட்டத்தில் பேச்சு: ஒரேமேடையில் ஜி.ஜி. எஸ்.ஜே.வி.

—நமது காரியாலய நிருபர்—

யாழ்ப்பாணம், புதன்

'ஆசிரியர்களின் இடமாற்றத்தை கல்வித்துறையில் அடியோடு இல்லாமல் செய்ய வேண்டும். இதற்காகவாவது தமிழினமும், தமிழ் ஆசிரியர் சங்கங்களும் ஒன்று படமுன்வரல் வேண்டும்' என தமிழரசுத் தலைவர் திரு. எஸ் ஜே. வி செல்வநாயகம் அருகில் இருக்க தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம் பகிரங்க அழைப்பு விடுத்தார்.

திரு. எஸ் ஜே வி செல்வநாயகம் எம் பி யும் திரு ஜி ஜி பொன்னம்பலம் எம் பியும் ஒரே மேடையில் ஒரே வரிசையில் இருந்தனர்.

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நேற்றிரவு கூட்டம் நடைபெற்றது.

தேசிய ஆசிரிய சங்க உத்தியோகஸ்தர்களான திருவாளர்கள் சிவனேசன், சந்தியாபிள்ளை ஆகிய இருவரையும் கல்வி அமைச்சு திடீரென இடமாற்றம் செய்ததைக் கண்டித்து வடமாகாண ஆசிரியர் சங்கம் இக் கூட்டத்தை நடத்தியது. திரு. செல்வநாயகம் கூட்டத்துக்கு வந்திருந்த போதும் உடல் நிலை சரியில்லாததால் பேசவில்லை.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஆசிரிய சங்க காரியாலயத்திலிருந்து புறப்பத்தை சென்றடைந்தது.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய வடமாகாண ஆசிரிய சங்கத் தலைவர் திரு. வி சிவசுப்பிரமணியம் பேசுகையில் இடமாற்றத்தைத் தாம் எதிர்க்கவில்லையென்றும், இடமாற்றம் செய்த முறையைத்தான் தாம் எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் பேசியதாவது.

கல்வி இலாகா பிரச்னை [illegible] இல்லாமல் [illegible] அரசாங்க சேவைக் கமிஷன் போல, கல்வி சேவைக் [illegible] பது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல கல்வி வளர்ச்சி மாணவர் கல்வி முன்னேற்றம் ஆகியவற்றையே பாதிக்கும் ஒரு பெரும் செயலாகும்.

கல்வி அதிகாரபீடம் இடமாற்றத்தை ஒரு கைப் பிரம்பாகப் பாவிக்கிறது. பாடசாலைகளை மத்திய அரசாங்கம் நடாத்த வேண்டும். மாவட்ட ரீதியாக அதன் சேவை இருக்க வேண்டும். ஆசிரியர் இடமாற்றங்களை ஆசிரியர் [illegible] பிளவுபட்டு [illegible] ன்றும் செய்ய முடியாது. நாங்கள் ஒன்று [illegible]

## 'பிரச்னையைத் தீர்க்க தமிழ் கட்சிகளுக்கு திறமையில்லை'

— சண்முகதாசன்

பருத்தித்துறை, செவ்வாய்

''மந்திரிப்பதவி மூலமும் சலுகைகளுக்குப் பேரம்பேசுவதன் மூலமும், அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருப்பதன் மூலமும் பிரதமருக்குச் சிலையெடுப்பதன் மூலமும் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது உண்மையை முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்குத் தமிழ்மக்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர். இன, மொழிப் பிரச்னைகள் பொருளாதாரப் பிரனையை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றைத் தீர்க்கும் திறமைஎந்தவொரு தமிழ்க் கட்சிக்கும் கிடையாது.''

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி(பீக்கிங்) தலைவர் திரு. என் சண்முகதாஸன் நேற்றிரவு நெல்லியடியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட்வாலிபர் முன்னணி ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்துப்பேசியபோது குறிப்பிட்டார்.

புரட்சிப் பாதையைவிட்டு மக்களுக்கு ஒரு மாயாவாதப்பாதையான ஆட்சிமன்றப் பாதையைக் காட்டுவதன் மூலம் திரிபுவாதிகளும் கூட்டுமுன்னணியிரும் உண்மையான சோஷலிசத்திற்கு வழிவகுப்பதற்குப் பதிலாக ஏகாதியத்திய முதலாளித்துவ சக்திகளுக்கு ஆதரவு கொடுக்கின்றனர். தாங்கள் வெளியிட்ட கூட்டு முன்னணி வேலைத் திட்டத்தில் பத்திரிகைகளை எடுப்பதுபற்றி எதுவும் குறிப்பிடாதமை அவர்களது அரசியல் வங்குரோத்துத் தனத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்'' எனவும் அவர் சொன்னார்.

சிங்கள மக்களுக்கு

## "குடும்பக் கட்டுப்பாட்டுதிட்டத்தை தமிழ் டாக்டர்கள் செய்யக்கூடாது"

### செனட்சபையில் ஒரு வேண்டுகோள்

கொழும்பு, செவ்

குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் சம்பந்தமாக சிங்களவர் மத்தியில் நிலவும் ஒருவித அச்சத்தைப் போக்குவதற்காக இந்தத் திட்டத்தை சிங்கள மக்கள் மத்தியில் அமுல் நடத்துவதற்கு தமிழ் டாக்டர்கள் அனுமதிக்கப்படக் கூடாது என செனட் சபையில் இன்று செனட்டர் டி எப் பேதிரிஸ் வேண்டுகோளொன்றை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் திரு விஜயமானே வைத்தியத் துறையிலீடுபட்டுள்ளவர்கள் இனபேதம் பாராட்டுவதில்லையென்றும் இது தவருன ஒரு கருத்து என்றும் குறிப்பிட்டார்.

செனட்டர் நீதிராஜா வேலையில்லாத் திண்டாட்டம் சம்பந்தமாகப் பேசுகையில் கல்வி முறையில் மாற்றம் ஏற்படவேண்டுமென்றும் விவசாயம் தொழில் துறைகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

வேலை நிறுத்தங்கள் ஏழைமக்களையே அதிகம் பாதிப்பதாக அவர் மேலும் பேசுகையில் கூறினர்.

மந்திகை ஆஸ்பத்திரியில்

## நோயாளர் புறக்கணிப்பு

புலோலி, செவ்வாய்

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள் அங்கு கடமைபுரிகின்ற சிறு ஊழியர்களால் புறக்கணிக்கப் படுகின்றனராம்.

கடந்த சிலவாரங்களுக்கு முன்பு குழந்தைப்பிள்ளை வார்ட்டில் சிறுபிள்ளைகளின்

## முன்னாள் கல்வி அமைச்சர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி (பீக்கிங்) தலைவர் திரு. என் சண்முகதாஸன் நேற்றிரவு நெல்லியடியில் நடை... அரசியல் வங்குரோத்துத் தனத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்'' எனவும் அவர் சொன்னார்.

## பஸ் நிலையத்தில் சுவீ விளம்பரம் செய்ய அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம் புதன்

பஸ் நிலையத்தில் வைத்து சுவீப் டிக்கட் வாகனங்கள் விளம்பரம் செய்வதற்கு அனுமதி கொடுக்க மறுத்துள்ளார் வடபகுதிபொலிஸ் சுப்பிரிண்டன். ஆனால் அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்கிறார் தேசியலொத்தர்சபைத்தலைவர்.

சுவீப் டிக்கட் விற்பனை அரசாங்கத்துக்கு நிதி கூட்டும் ஒரு தொழிலாதலால் அதனை எங்கு வைத்து விற்பனை செய்யவும் அனுமதி வழங்கப்படல் வேண்டுமென லொத்தர் சபைத் தலைவர் திரு. பொரளகம பொலிசாருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

பஸ் பிரயாணிகளும் வர்த்தகர்களும் இது தமக்கு இடைஞ்சலாகவிருப்பதாக புகார்செய்வதால் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி வழங்குவதில் கஷ்டமேற்பட்டுள்ளதாக பொலிஸ் பகுதியினர் இதற்கு பதில் அனுப்பியுள்ளனர்.

ஆனால் இவ் விஷயம் இப்போது பொலிஸ் தலைமைக் காரியாலயம்வரை பரிசீலனைக்குச் சென்றுள்ளது.

(கா. நி

## ரூ. 10 ஆயிரம்பெறுமதியான நகையும் பணமும் திருட்டு

வல்வெட்டித்துறை, செவ்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை என்பவர் வீட்டில் ரூபா 10,000 பெறுமதியான நகைகள், பணம் திருட்டுப் போய் விட்டதாக பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்துவருகின்றனர்

## "தமிழ் மொழிவளர தமிழ் பயிற்சி வகுப்புகள் அவசியம்"

உரும்பராய். செவ்வாய்

''நமது தமிழ்மொழியை வளர்க்க நாம்பாடுபடவேண்டும். தமிழ்மொழியை வளர்க்கும் உன்னதமானபெரும் பொறுப்பு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியரையே பெரிதும் சார்ந்துள்ளது. ஜீ. ஸீ ஈ. வகுப்புக்களில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி வகுப்பினை நடாத்துவதற்கு அரசாங்கம் முன்வந்திருப்பது மிகவும் பாராட்டக்கூடியதே. சேவைக் காலப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டிருக்கும் ஆசிரியர்களாகிய நீங்கள் உங்கள் பாடசாலைகளில் கற்கும் ஜீ. ஸீ. ஈ. வகுப்பு மாணவர்களுக்கு இப்பயிற்சி வகுப்பின் மூலம் தெரிந்து கொண்ட புதிய முறைகளைக் கையாண்டு கற்பிக்கும் போது வருங்காலச் சந்ததியினரான அம்மாணவர்கள் தமிழ்மொழித் துறையில் நிச்சயம் முன்னேற்றம் காட்டுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.''

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளில் ஜீ. ஸீ. ஈ வகுப்புக்களில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி வகுப்பின் பூர்த்திநாளன்று கலந்துகொண்ட கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினார்

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெற்ற இந்த தமிழ்ப் பயிற்சி வகுப்பில் கோப்பாய் வட்டாரத்தில் ஜீ. ஸீ. ஈ. வகுப்புக்கள் உள்ள பதினேழு பாடசாலைகளில் இருந்து இருபத்தைந்து ஆசிரியர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் பண்டிதர் இ. நவரத்தினத்தைப் போதனாசிரியராக கொண்ட இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் வித்தியாபகுதிக்கும் பயிற்சி வகுப்பு அமைப்பாளர் திரு. அ. பஞ்சாட்சரம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

...உடல் நிலை சரியில்லாததால் பேசவில்லை.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஆசிரிய சங்க காரியாலயத்திலிருந்து புறப்பட்டஆசிரியர்களின் சுலோகம் தாங்கிய அரைமைல் நீள ஊர்வலம் நகர வீதிகளுக் கூடாக நகர மண்ட... பலம் பேசியதாவது.

கல்வி இலாகா பிரச்னை இல்லாமல் நடப்பதென்றால் அரசாங்க சேவைக் கமிஷன் போல, கல்வி சேவைக் கமிஷன் ஒன்று நியமிக்க வேண்டும் என்று நான் என்றே எடுத்துச் சொன்னேன். இடமாற்றம் என்க வேண்டும். ஆசிரியர் இடமாற்றங்களை ஆசிரியர் சங்கங்கள் பிளவுபட்டு நின்று ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் ஒன்று சேர சக்தியில்லாமல் தயங்குகிறோம், பிரிந்து பிரிந்து இருப்பது தமிழனின் தனிக் குணம். சகல ஆசிரிய சங்கங்களும் ஒன்றுபட்டு அதிகாரத்துடன் போராடினால் வெற்றி பெறமுடியும்.

அதிபர்கள் தலைமையாசிரியர்களின் அனுமதி பெறுமல் ஆசிரியர் இடமாற்றம் செய்வதை எதிர்க்க வேண்டும். விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாத இடங்களுக்கு, வடமாகாண விஞ்ஞான ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். இதனால் இவர்களின் திறமை வீணாவதோடு, தேவைகள் நிராகரிக்கப்படுகின்றன. இது ஒழிக்கப்படவேண்டும்.

இடமாற்றத்தை கல்வித் துறையில் இல்லாமல் செய்ய வேண்டும், இந்த ஒரு விஷயத்திலாவது தமிழ் இனமும், தமிழ் ஆசிரியர் சங்கங்கம்ஒன்றுபட வேண்டுமென்று நான் அழைப்பு விடுகின்றேன்,

செனட்டர் எஸ். நடராஜா பேசியதாவது:

பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த அன்றே கல்வித் தரம் குறையத் தொடங்கியது. ஆசிரியர்களுக்கு தேசிய ரீதியாகவும் பிரச்னை வந்தது. அது முடிவுக்கு வரக் கூடியதாகவும் இல்லை.

அரசாங்கம் பாடசாலைகளை ஒரு திட்டம் கொள்கை இல்லாமல் சுவீகரித்தது. அன்றை தமிழ் மக்களின் கல்வி பாழாகத் தொடங்கியது.

கல்வித் திணைக்களம் இன்று முக்கியமாக வடமாண கல்வித் தரத்தையே குறைக்க முயற்சிகள் எடுத்து வருகின்றது இது கல்வி மந்திரியின் ஒரு சூழ்ச்சியாகும்.

இவ் இரு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதற்குக் காரணமே இந்தச் சூழ்நிலைதான் என்றும் செனட்டர் கூறினார்.

ஆசிரிய தாய்ச் சங்கப் பிரமுகரான திரு. எல்.எம். பெரேரா பேசுகையில் தொழிற் சங்கங்களின் நடவடிக்கையை அரசாங்கம் கட்டுப்படுத்த முடிகின்றது என்றார்.

திருவாளர்கள் அ வைத்திலிங்கம், ரி தங்கராசா, எம் கார்த்திகேசன், எம் எஸ் ஏ றகீம், எஸ் கணேசன், சி பஞ்சலிங்கம், ஆர் பானுதேவன், எஸ். மகேசன் ஆகியோரும் பேசினார்கள்.

(கா நி)

## சீன உள் மாகாணங்களில் அரசியல்கோஷ்டிமோதல்கள்

### டஸ் வெளியிடும் தகவல்

ஹாங்காங், செப். 23

சீனாவில் பல மாகாணங்களில் பலத்த மோதல்கள் நடப்பதாக சோவியத் செய்தி ஸ்தாபனங்கள் அறிவித்திருக்கின்றது.

சீனாவில் அதிகாரப் போட்டி வலுத்து கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டிருப்பதாகவும், ராணுவத்தோடும் பலத்த மோதல்கள் நடப்பதாகவும் மாஸ்கோ செய்திகள் கூறுகின்றன.

அண்மையில் சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் பீகிங் சென்று சீனப் பிரதம மந்திரி திரு. சூ-என்-லாயைச் சந்தித்த பின்னர் சீனா பற்றி குறை கூறுவதை நிறுத்தியிருந்து சோவியத் செய்தி ஸ்தாபனம் முதல் தடவையாக வெளிட்டியிருக்கும் இச்செய்தியில் சீனாவில் அரசியல் ஆதிக்கப்போர் வலுத்தி விடுவதாக அறிவித்துள்ளது.

சீனா, இப்பொழுது ஏகாதிபத்தியவாதிகளைக் கண்டிப்பதைக் கைவிட்டிருக்கிறது. சீனாவின் பிரசார தந்திரம் முழுமையாக சோவியத் யூனியன் மீதும் இதர கம்யூனிஸ்ட் நாடுகள் மீதும் முடுக்கி விட்டிருக்கிறது என்று டாஸ் கூறியது.

சீனாவில் தலைவர் மா-சே-துங்கின் ஆதிக்கம் குறைந்து வருவதாகவும் அவரது வாரிசான லிப்பியாவுக்கும் மா-சே-துங்கிற்குமிடையில் அதிகாரப்போட்டி ஏற்பட்டிருப்பதாகவும் முன்னர் வந்த செய்திகள் கூறின. இதற்கிடையில் இந்த இரு தலைவர்களுக்கும் சுகவீனம் ஏற்பட்டிருப்பதாகவும் அதனால் பிரதமர் சூ-என்-லாய் அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றியிருப்பதாகவும் பிந்திக் கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறின.

இப்பொழுது டாஸ் வெளியிட்டிருக்கும் செய்தியின் படி. சீனாவில் சாம்பி' ஹெப்பே போன்ற முக்கிய மாகாணங்களில் மோதல்கள் தொடர்ந்து நடப்பதாகவும் இவைகளை அடக்கி ஒழிப்பதற்கு ராணுவம் பெரு முயற்சியில் இறங்கியிருப்பதாகவும் தெரிகின்றது.

நேற்று 7 மணிநேரம் தாமதம்

## 29 மணித்தியாலங்கள் 'லைன் அவுட் ஒவ் ஓடர்'

யாழ்ப்பாணம், புதன்

நேற்று முன்தினம் அதிகாலையிலிருந்து நேற்று நண்பகல் வரை தொடர்ச்சியாக 29 மணித்தியாலங்கள் யாழ்ப்பாணம்—கொழும்பு தொலைபேசித் தொடர்பு 'அவுட் ஒவ் ஓடராக' இருந்தது.

வர்த்தகர்கள், அரசாங்க அதிகாரிகள், தனிப்பட்டவர்கள் எவரும் கொழும்புடன் தொடர்பு கொள்ள முடியாதிருந்தது. மிகத் தொன்மை வாய்ந்த தொலைபேசிக் கம்பிகள் பழுதடைந்ததே இதற்குக்காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் தொடர்பு மீண்டும் சரிசெய்யப்பட்ட போதும் கொழும்புடன் தொடர்பு கொள்ள 7 மணி நேரம் தாமதமாகும் என தொலைபேசி இயக்குனர்கள் தெரிவித்தனர்.

(கா. நி.)

...யிலீடுபட்டுள்ளவர்கள் இன பேசுகையில் கூறினார்.

## முன்னாள் கல்வி அமைச்சர் கன்னங்கரா காலமானார்

கோட்டை, செவ்

முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் சி டபிள்யு டபிள்யு கன்னங்கரா இன்று மாலை தமது 85-வது வயதில் காலமானார்,

இலவசக் கல்வியின் தந்தையென அழைக்கப்படும் டாக்டர் கன்னங்கரா உள்ளூராட்சி அமைச்சராகவுமிருந்தார் இவர் இலங்கையின் இந்தோனேஷியா தூதராகவுமிருந்தார்

இவரது பிரிவு கல்வித்துறைக்கு ஒரு பேரிழப்பு என கல்வி அமைச்சர் திரு ஐ எம் ஆர் ஏ இரிய கொல்லை தெரிவித்துள்ளார் டாக்டர் கன்னங்கரா கிராமபிள்ளைகளுக்கு பெரும் தொண்டாற்றியவர் என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

பெற்ரேலியம் கூட்டுத்தாபன ஊழியர்

## பேச்சுவார்த்தையில் தீர்மானமில்லை

### வேலைநிறுத்தம் தொடர்கிறது

கோட்டை, செவ்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பெற்ரோலியம் கூட்டுத்தாபன ஊழியர்கள் தேசிய சேவை அமைச்சருடன் இன்று மாலை நடத்திய பேச்சுவார்த்தை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாமல் முடிவடைந்தது.

கூட்டுத்தாபன ஊழியர்கள் தங்களது கோரிக்கைகள் பற்றி அமைச்சருடன் பலமணி நேரம் பேசினர் 15 கோரிக்கைகளில் ஏழு கோரிக்கைகளை தாம் ஏற்கத் தயாராக விருப்பதாக அமைச்சர் திரு சுகததாசா தெரிவித்தார்.

கூட்டுஸ்தாபன உடைமைகளுக்குச் சேதம் விளைவிப்பதற்கான. அபராதம் 1,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்,

இது இவ்வாறிருக்க வேலை நிறுத்தம் செய்யும் கடற்றொழில் கூட்டுத்தாபன ஊழியர்களில் பலர் இன்று வேலைக்குத் திரும்பியுள்ளதாக அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது,

யாழ்ப்பாணத்தில்

## இ. தி. மு. க. மகாநாட்டு உரை பற்றி அரசாங்க அதிபர் அமைச்சர் சந்திப்பு

நல்லூர், புதன்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இ. தி. மு. க, மகாநாட்டில் பேசப்பட்டதாகக் கூறப்படும் ஒரு செய்தி சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

அரசாங்க அதிபர், வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், மற்றும் சில உயர் அதிகாரிகள் இச் செய்தி சம்பந்தமாக நேற்று பேச்சுவார்த்தை நடாத்தினர். இதுபற்றி சி. ஐ. டி பொலிசார் நடாத்திய அறிக்கையையும் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுண வர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பேசுகையில், ஆயுதங்கள் கடத்திக் கொண்டு வந்து, தமிழர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கொரில்லா யுத்தஞ் செய்ய வேண்டுமென்று கூறியதாக சில ஆங்கில சிங்கள பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி பற்றி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டிருப்பது தெரிந்ததே.

### நூல் வெளியீடு

புலோலி, செவ்வாய்

இம் மாதம் 28ம் திகதி 'பொது அறிவுப் பூங்கா' என்ற நூல் மந்திகையில் இளம் மாணவர் மன்றத்தில் வெளியிடப்பட விருக்கிறது. திரு வி மகாலிங்கம் தலைமை வகிப்பர்.

...யர்களால் புறக்கணிக்கப் படுகின்றனராம்.

கடந்த சிலவாரங்களுக்கு முன்பு குழந்தைப்பிள்ளை வார்ட்டில் சிறுபிள்ளைகளின் தங்கச் சங்கிலியும் மேதிரமும் இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டது சம்பந்தமாக மேலதிகாரிகளுக்குப் புகார் செய்யப் பட்டதைத் தொடர்ந்தே இவ்வித புறக்கணிப்பு நடப்பதாகவும் இதனால் ஆஸ்பத்திரி வந்துமறுநாளே நோயாளர் பலர் பலர் வீடு திரும்பிவிடுவதாகவும் கூறப் படுகிறது.

## ரஷ்யாவில் இலங்கை தூதர்

கோட்டை, செவ்.

ரஷ்ய அரசாங்கத்தின்அங்கீகாரத்துடன் இலங்கை அரசாங்கம் திரு. ஜே. சி. ரி. கொத்தலாவலவை ரஷ்யாவின் இலங்கைத்தூதுவராக நியமித்துள்ளது.

இவர் இப்பதவியை அக்டோபர் மாதம் ஏற்றுக் கொள்வார்.

திரு. கொத்தலாவலபதுளை பாராளுமன்ற உறுப்பினராக 1947-56வரை இருந்தார். லங்காசமசமாஜக்கட்சியின் அங்கத்தவராகவும், 1945-ல் பொதுக் காரியதரிசியாகவும் இருந்தார். இவர் 1960-ல் பதுளையில் பொதுத்தேர்தலில் போட்டியிட்டார்.

யாழ் மாவட்டத்தில்

## நான்கு கிராம சேவையாளர்கள்

### தற்காலிக வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது நான்குகிராம சேவையாளர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க செயலக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கா, நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய உச்சி மாநாட்டில் ஈராக் கலந்து கொள்ளாது

## பாலஸ்தீன பிரச்னையையும் விவாதிக்க பல நாடுகள் கோரிக்கை

றபாத், செப் 23

இஸ்லாமிய நாடுகளின் உச்சி மாநாடு நேற்றிரவு மொராக்கோ தலைநகரான றபாத்தில் ஆரம்பமாகியது மொராக்கோ மன்னர் ஹசன் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். மாநாடு மூன்று நாட்களுக்குத்தொடர்ந்து நடைபெறும்.

மன்னர் ஹசன், தலைமையுரையில் உலக முஸ்லிம்கள் அனைவரும் இந்தமாநாட்டின் முடிவுகள்பற்றி அறிய ஆர்வத்தோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் புனிததலங்களைப் பாதுகாப்பது நமது மிகமுக்கிய கடமையாகும் என்று குறிப்பிட்டார்.

ஈரான்மன்னர் ஷாஎன்ஷா பேசுகையில் முஸ்லிம் நாடுகளுக்கிடையில் ஒற்றுமை நிலவவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினார்.

இந்த மாநாட்டில் ஜெருசலத்திலுள்ள அல்அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்ட விஷயமும், இஸ்ரேலியர் கைப்பற்றிக்கொண்டுள்ள பகுதிகளிலுள்ள முஸ்லிம் புனித இடங்கள் போன்ற விஷயங்களும் மாத்திரமே ஆலோசிக்கப்பட வேண்டும் என்று பல நாடுகள் வற்புறுத்தியுள்ளன. ஆனால் பாலஸ்தீன பிரச்னை முழுமையாக ஆலோசிக்கப்பட வேண்டும் என்று வேறு சில நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தப் பிரச்னையின்மீது மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று ஈராக் அறிவித்துள்ளது. ஈரானும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அரபுநாடுகள் பலவற்றின் மன்னர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

சுமார் 37 நாடுகள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தபோதிலும் 26 நாடுகள் மட்டுமே கலந்துகொள்கின்றன, அல்-அக்ஸா மசூதிக்குப் புறம்பான எந்த விஜயமும் மாநாட்டில் விவாதிக்கப்பட்டால் தாம் மாநாட்டைப் பகிஷ்கரிக்கப்போவதாக பல நாடுகள் அறிவித்திருப்பதாகக் கூறியுள்ளன,

# சூ-என்-லாய் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டாராம்

## சீனாவிலிருந்து வரும் ஊர்ஜிதமற்ற செய்திகள்

ஹொங்காங், செப் 23

கம்யூனிஸ்ட் சீனாவில் மா-சே-துங் சுகவீனமுற்றிருப்பதாகவும் பிரதமர் சூ-என்-லாய் அதிகாரங்களைக் கைப்பற்றிவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஆனால் இவை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

மா-சே துங் சுகவீனமுற்றிருப்பதாக வெளிவந்த செய்திகளை பீகிங் அதிகாரிகள் மறுத்திருக்கின்றனர். மா-சே-துங் திடீரென நோய்வாய்ப்பட்டதாகச் செய்திகள் கூறின

சுமார் 11 நாட்களுக்கு முன் பீகிங்கில் சோவியத் பிரதமர் கோஸிஜினும் சீனப்பிரதமர் சூ-என்-லாயும் சந்தித்துப் பேசிய கம்யூனிஸ்ட் குடியரசு ஏற்பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

ஏற்கனவே மாறுதலுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பீகிங் ரேடியோ ஒலிபரப்புகளிலும், நவசீன செய்தி ஸ்தாபன அறிக்கைகளிலும் மா-சே-துங் வழிபாடு படிப்படியாகக்குறைந்துவிட்டது. சாதாரணமாக சீனக் கம்யூனிஸ்ட் பிரசார ஸ்தாபனங்கள் 'மா வாழ்க' என்று கூறித்தான் தங்களுடைய பிரசாரங்களை துவக்குவது வழக்கம். அதைத்தொடர்ந்து மா-சே-துங்கின் போதனைகள் இடம்பெறும். ஆனால் அவை இப்போது அடிக்கடி இடம்பெறுவ...ணியில் தள்ளப்பட்டுள்ளார் என்பதை சீன பற்றிய நிபுணர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் மீண்டும் அதிகாரப் போராட்டம்நடக்கலாமென்ற 'ஹஷ்யம் உண்மையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஹோ-சி-மின் மரணம் பற்றித் துக்கம் தெரிவிக்க மா-சே-துங் வியட்னாம் தூதரகத்துக்கு வராமல் போனதற்குக்காரணம் ஏதாவது இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. லின்பியாவும் வரவில்லை. இருவரும் உடல் நலம் இல்லாமல் இருக்கலாம். அக்டோபர் 1-ம் திகதியன்றுதான் இவர்களுடைய உடல் நிலைமை...

### உண்மையானகிராமத் தொண்டர்கள் யார்?

### உடுவில் எம். பி விளக்கம்

உடுவில், செவ்வாய்

''வளரும் ஒரு கிராமத்துக்கு பூரணசேவையைஆற்ற வேண்டுமாயின் அக்கிராமத்தின் தேவைகளையும், நடவடிக்கைகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். கிராம மக்களின் நேசமனப்பான்மையையும், நம்பிக்கையையும் பெற்றுள்ள ஒருவரால்தான் கிராமத்திற்கோ, சமூகத்திற்கோ, மக்களுக்கோ உதவி செய்ய, ஊக்கமளிக்க முடியும். அதற்கு அந்தக் கிராமத்தில் தொடர்ந்து வாழ்ந்து வருதல் அவசியம். இவ்வாறு கிராமத்துடன்ஒன்றுகி வாழ்ந்து தேவைகளைப் பூர்த்தி செய்பவனே ஒரு கிராம சேவகன். இப்படியான சேவைகளை புரிபவர்களுக்கு தகுந்தமுறையில்பட்டங்கள் கொடுத்தோ பதவிகள்வழங்கியோ கௌரவித்தல் அவசியம்''

உடுவில் பகுதியின் புதிய சமாதான நீதிபதியாக அரசாங்கத்தால் நியமனம்செய்யப்பட்ட உடுவில் கிராம சபையின் முதலாம்வட்டார அங்கத்தவர் திரு வீ. சிராளசிங்கத்தை கௌரவிக்கும் முகமாக, உடுவில்மக்களால் நடத்தப்பட்ட சேவைநலம் பாராட்டு விழாவில் பேசிய உடுவில் தொகுதி எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு திரு. கா. சிதம்பரநாதன் தலைமைவகித்தார்.

வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. பி.எல். பற்றிக்ஸ் பேசியதாவது.

பட்டங்களைப் பெறுவது இலகு. ஆனால் பட்டங்களைப் பெற்றபின் அதற்குத்தகுந்த முறையில் நடப்பதுதான்சிரமம் அதிலும் சமாதான நீதிபதிப் பதவி மிகவும் முக்கியமானதொன்று நேர்மை, நீதி போன்ற நற்பண்புகளையுடையவர்களால் தான் அதனை வெற்றியுடன்நடத்த முடியும்.

உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் பேசியதாவது.-

உடுவில் கிராமம் திரு. சிராளசிங்கத்தை புதியசமாதான நீதிபதியாகப் பெற்றதில் புத்தொளி பெற்றுள்ளது. கிராம மக்களுடன் கலந்துபேசுவதிலும் அவர்களைச் சிறந்த முறையில் திருத்தி வாழவைப்பதிலும் சமாதான நீதிபதி வல்லவர். அவருக்குக் கொடுக்கப்பட்டபட்டம் மிகவும் பொருத்தமானதே.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை, மற்றும் தலைமை ஆசிரியர்கள் திரு. எஸ். கதிரவேலு, திரு. ஏ. கந்தசாமி, இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் திரு. வே. மயில்வாகனம் உட்பட வேறு பலரும் பாராட்டுரை வழங்கினர்.

சமாதான நீதிபதி திரு. வி. சிராளசிங்கம் ...களிக்...

### யு எஸ். ராணுவ குறைப்பு

நியூயோர்க்.

செப்டம்பர் 23

அமெரிக்க ராணுவத்தின் பலம் குறிப்பிட்ட அளவு குறைக்கப்படவிருக்கின்றது.

சுமார் 77 ஆயிரம் ராணுவத்தினர் அமெரிக்க ராணுவத்திலிருந்து ... 22 சண்டைக் கப்பல்களும், 200 சண்டை...

# திருமலை செய்திகள்

### புதிய நியமனம்

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலையைச் சேர்ந்த திரு. பா. விஜயநாதன் திருக்கோணமலை மாவட்டத்தின் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### டாக்டர்கள் இல்லை

திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் அண்மையில் ஒரு வாரகாலத்திற்கு மேலாக தகுதி வாய்ந்த டாக்டர்கள் இல்லாமல் நோயாளிகள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகி இருந்தனர். இதனால் அபாயகரமான நிலையில் இருந்த பல நோயாளிகள் அநுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு விஜயம் செய்யும் வைத்திய நிபுணரும் இப்பொழுது வருவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

### "அவனா செய்தான்"?

திருமலைக் கலாமன்றத்தினர் ''அவனா செய்தான்''? என்னும் நாடகத்தை சென் ஜோசப் கல்லூரியில் இன்று மாலை திருமலை நகரபிதா டாக்டர் சி. சிவானந்தம் தலைமையில் அரங்கேற்ற உள்ளனர்.

—

### 3-ம், 4-ம் வகுப்பு பரீட்சை

உரும்பராய், செவ்.

வலி. கிழக்குத் தமிழ்ஆசிரியர் சங்கம் இந்த ஆண்டு தொடங்கி மூன்றும் நான்காம் வகுப்புப் பரீட்சைகளை வருடந்தோறும் வருடஇறுதியில் நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது.

மாணவர்களின் முன்னேற்றம் கருதி ஏற்பாடு செய்யப்படும் இப் பரீட்சைக்கு கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் அதிபர்கள் தலைமைஆசிரியர்கள் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு அவசியமென வலி கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் பாடசாலைகளுக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

மூன்றும் வகுப்புப் பரீட்சைக்கு தமிழ், எண், சூழல் ஆகியபாடங்களும்4-ம்வகுப்புப் பரீட்சைக்கு தமிழ், எண், சூழல், ஆங்கிலம் ஆகிய பாடங்களும் பரீட்...

# 'கச்சேரி முறை ஒழியும் காலம் விரைவில் வரும்''

### — உடுவில் எம். பி.

மண்டைதீவு, திங்கள்

இன்று இலங்கை பிரித்தானிய அரசியலமைப்பின்படி அதற்குக் கீழ்ப்பட்ட நாடாகவும் இருந்துவருகிறது. இலங்கையின் தேசாதிபதி என்பவர் பிரித்தானிய இராணியின் பிரதிநிதியாயிருப்பது இதற்குச் சான்றாகும். அத்துடன் 'கச்சேரி' எனும் நிர்வாக அமைப்பானது பிரித்தானியாவிற்கும் இலங்கைக்குமிடையேயுள்ள தொடர்பை எடுத்துவிளக்குவதாகும். இக்கச்சேரிமுறை உண்மையான சுதந்திரஜனநாயக நாடுகளில் கிடையாது. உண்மையான ஜனநாயக வாதிகள் இந்த முறையை எதிர்க்கிறார்கள். இன்னும் சிலகாலத்தில் இது முற்றாக அழிந்துபோய் விடும். அதற்காகத் தமிழரசுக்கட்சி பாடுபடுகின்றது. எமது கட்சி தமிழ்மக்களின் உரிமைகளை இன்றோ நாளையோ அடைந்தேதீரும். அதற்காக எல்லாவகையிலும் அது போராடும்''

இவ்வாறு மண்டைதீவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் பேசிய உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம் சொன்னார்.

அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்க அரசாங்கம் குழு ஒன்றை அமைத்துள்ளது. அதில் எல்லாக் கட்சிகளிலிருந்தும் அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் இதன் மூலமும் நாம் பலனடைய வழியுண்டு. நாம் சுயாட்சி அமைத்து அதன்மூலம்தமிழ் நாடு ஒன்றை அமைப்போம் என்ற வாய்ப்பேச்சு மட்டும் சுயாட்சி கொடுத்துவிடாது. எல்லோருடனும் ஒன்று சேர்ந்து பாடுபாடும்போது பெறமுடியாத சுயாட்சியை தனித்துநின்று பெற்றுவிடலாம் என்று கூறி மக்களை இன்னும் ஏமாற்ற முடியாது'' எனஅவர் கூறினார்.

இதுவரை ஆட்சிபீடத்தில் அமர்ந்த எல்லா அரசாங்கத்தையும் விட தேசிய அரசாங்கம் மற்றவற்றிலும் பார்க்க ஒரேஒரு விதத்தில் பெருமையடைகிறது. அதாவது திருகோணமலையின் கள்ளக்குடியேற்றத்தை எதிர்த்து அது வழக்குகள் நடத்தியது.

# தீவுப் பகுதி செய்திகள்

அல்லைப்பிட்டி, செவ்வாய்

''காலத்துக்குக் காலம் நாவலர்போன்றசைவப்பெரியார்கள் தோன்றியதன் மூலம் சைவசமயம்புத்துயிர் பெற்றுத் தழைத்து யாழ்ப்பாணம் அந்நியரின் ஆளுகைக்குட்பட்டிருக்கும்போது அஞ்சாமல் தமிழையும், சைவத்தையும் அழிந்து போகாவண்ணம் அவர்கள் பாதுகாத்தார்கள் இப்பெரியார்களின் வழியை இந்து சமயத்தவர்கள் பின்பற்றுதல் வேண்டும். மனிதனது வாழ்க்கையோடு சமயம்பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளது. சமயத்தின் மூலம் மனிதன் தீயவழிகளினின்றும் விலகி நல்வழியை அடையக் கூடியதாய்உள்ளது.'' மேற்கண்டவாறு வேலணை மத்தியமகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற சமயச் சொற்பொழிவின்போது ஆசிரியர் திரு. தி. சிவநேசபிள்ளை குறிப்பிட்டார்.

### திருட்டு

வேலணை மேற்குப்பிள்ளையார் கோவிலில் இரவு நேரத்தில் திருடர்கள் புகுந்து மூலவிக்கிரகத்தைப் பெயர்த்து தங்கத்தகடுகளைத் திருடிச்சென்றுவிட்டதாக கோவில் நிர்வா...

### நுவரெலியா செல்வார்

நுவரெலியா, செவ்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸா அக்டோபர் முதலாம்தேதி நுவரெலியாவுக்குச் செல்லவுள்ளார். ஹெலிக்கோப்டர் மூலம் செல்லும் உள்ளூராட்சியமைச்சர் நுவரெலியா மாநகரசபை விசேஷ ஆணையாளரோடு அங்கு நடைபெறவிருக்கும் சபை அங்கத்தவர்களின் மகாநாடொன்றில் பங்குபற்றுவார்.

இதையடுத்து அக்டோபர் 2-ம்திகதி நுவரெலியா அரசாங்க அதிபர் கூட்டும் மகாநாட்டிலும் உள்ளூராட்சி அமைச்சர் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### சமசமாஜ வாலிபர் சங்கம் உதயம்

வண்ணார்பண்ணை, செவ்.

வண்ணார்பண்ணை சமசமாஜ வாலிப சங்கத்தின் ஆரம்பக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மா-சே-துங் ... நோய்வாய்ப்பட்டதாகக் ... செய்திகள் கூறின.

சுமார் 11 நாட்களுக்கு முன் பீகிங்கில் சோவியத் பிரதமர் கோஸிஜினும் சீனப்பிரதமர் சூ-என்-லாயும் சந்தித்துப் பேசிய பின்னர் பீகிங்கைக் குறை கூறுவதை நிறுத்தியிருந்த சோவியத் பத்திரிகையான டாஸ் மீண்டும் சீனத்தலைவர்களைக் கண்டிக்கத்தொடங்கியிருக்கின்றது. சீனர்களைப் பேச்சுவார்த்தைகள் நடத்த வரும்படி விடுக்கப்பட்ட அழைப்புக்கு அவர்கள் இன்னும் பதிலளிக்காமலிருப்பதாக மாஸ்கோ வானொலி கூறியது.

அக்டோபர் முதலாம்திகதி கம்யூனிஸ்ட் சீன அரசியல் புதிய திருப்பம் ஏற்படலாம் என்பதற்கான குறிகள் காணப்படுகின்றன. அக்டோபர் 1-ம் திகதி சீன ... தங்களுடைய பிரசாரங்களை துவக்குவது வழக்கம். அதைத்தொடர்ந்து மா-சே-துங்கின் போதனைகள் இடம்பெறும். ஆனால் அவை இப்போது அடிக்கடி இடம்பெறுவதில்லை.

அக்டோபர் தினத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள 29 கோஷங்களில் மா-சே-துங்கின் சிந்தனைகள் கடைசியில் தான் இடம்பெற்றுள்ளன. இப்போது அந்தக் கோஷங்களில் உற்பத்தி, பொருளாதார அபிவிருத்தி, ஆயுதவுற்பத்திற்கும் அமெரிக்காவுடன் அல்லது ரஷ்யாவுடன் அல்லது இரண்டுடனும் நடக்கக்கூடிய அணு ஆயுத யுத்தம் பற்றி மக்களை உஷார்ப்படுத்துவதற்கும் அதி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மா-சே-துங் ஏன் பின ... ஏது இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ... உடல் நலம் இல்லாமல் இருக்கலாம். அக்டோபர் 1-ம் திகதியன்றுதான் அவரது உடல் நிலைமை எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பது பற்றித் தெரியவரும். அன்று நடக்கவிருக்கும் அக்டோபர் கொண்டாட்டங்களில் அவர் தோன்றுவார் என்று கூறப்படுகிறது.

சூ-என்-லாய் எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றி விட்டதாகவும் அவர்தான் நாட்டை ஆளுகிறார் என்றும் ஹேஷ்யங்கள் உலவுகின்றன. சென்ற சில நாட்களில் அந்நிய ராஜதந்திரிகளுக்குப் பேட்டி தருவது சூ-என்-லாய் தான். இது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறப்படுகிறது.

... குறைக்கப்பட்டிருக்கின்றது.

சுமார் 77 ஆயிரம் ராணுவத்தினர் அமெரிக்க ராணுவத்திலிருந்து நீக்கப்படவிருக்கிறார்கள். 22 சண்டைக் கப்பல்களும், 200 சண்டை விமானங்களும் விலக்கிக்கொள்ளப்படவிருக்கின்றன.

... உத்தியோகத்தர் திரு. வே. மயில்வாகனம் உட்பட வேறு பலரும் பாராட்டுரை வழங்கினர்.

சமாதான நீதிபதி திரு. வி. சிராஜசிங்கம் ... அளிக்கப்பட்ட வரவேற்புக்கும், பாராட்டுக்கும் நன்றி தெரிவித்தார்.

... கேட்டுக்கொண்டுள்ளனர்.

மூன்றும் வகுப்புப் பரீட்சைக்கு தமிழ், எண், குழல் ஆகிய பாடங்களும் 4-ம் வகுப்புப் பரீட்சைக்கு தமிழ், எண், குழல், ஆங்கிலம் ஆகிய பாடங்களும் பரீட்சிக்கப்படவிருக்கின்றன. நவம்பர் மாதம் பிற்பகுதியில் இப்பாடங்களுக்கான பரீட்சைகள் நடைபெறும்.

வேலணை மேற்குப் பிள்ளையார் கோவிலில் இரவு நேரத்தில் திருடர்கள் புகுந்து மூலவிக்கிரகத்தைப் பெயர்த்து தங்கத் தகடுகளைத் திருடிச்சென்றுவிட்டதாக கோவில் நிர்வாகிகள் ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### கிளித்தட்டு

வேலணை தெரிவுக் கோஷ்டிக்கும், சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகக் கோஷ்டிக்குமிடையே வேலணை மத்திய விளையாட்டுத்திடலில் சிநேகபூர்வமான முறையில் கிளித்தட்டுப்போட்டியொன்று நடைபெற்றது. சுதுமலைக் கோஷ்டியினர் 11-0 புள்ளிகளால் வேலணைக் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். இப்போட்டிக்கு விளையாட்டுப் போதனாசிரியர் திரு. நடராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### 'சட்டத்தைத்திருத்துக'

சிறுபான்மைத் தமிழருக்கு ஆதரவாக சமூகக்குறைபாடு ஒழிப்புச்சட்டத்தைத் திருத்தி அமைக்குமாறு அரசினரைக் கேட்டுக்கொள்ளுவதென வேலணைக் கிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆறும்வட்டார உறுப்பினர் திரு மு. ஆறுமுகத்தினல் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

### கோரிக்கை

அல்லைப்பிட்டி, மண்கும்பான் மணல் தினமும் ஏராளமாக வெளியிடங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்படுவதாகவும், இம்மணலைப் பயன்படுத்திக் கண்ணாடித் தொழிற்சாலையொன்றை இப்பகுயில் அமைப்பதன் மூலம் பின்தங்கிய இடமாகிய தீவுப்பகுதியில் உள்ளவாலிபர்களின் வேலையில்லாப் பிரச்னையை ஓரளவுதீர்க்க முடியுமென்றும் ஆகவே அரசினரின் உதவி பெற்று ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினத்திடம் தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக்கழகத்தினர் கேட்டுள்ளனர்.

### நியமனம்

புங்குடுதீவைச் சேர்ந்த திரு, வி. வீனஸ் ஊர்காவற்றுறை அரசினர் ஆங்கில ஆஸ்பத்திரிக்குஉத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சங்கம் உதயம்

வண்ணார்பண்ணை, செவ்.

வண்ணார்பண்ணை சமாஜ வாலிப சங்கத்தின் ஆரம்பக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- இ. இளங்கோ, காரியதரிசி- சு. இராமச்சந்திரன், தனாதிகாரி- சு. அருமைநாயகம்.

மற்றும் 5 பேரைக் கொண்ட ஒரு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் திரு. அ. விசுவநாதன், சம்பந்தன் ... குணதிலகா உட்படப் பலர் பேசினர்.

---

# உணர்ச்சிகளை அறிவுக்குள் அடக்கிவைத்திருந்த பெரியார்

## ஸ்ரீநிவாச சாஸ்திரியாருக்குநினைவுஅஞ்சலி

சென்னை, செப். 23

''மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் மகாத்மா காந்தியின் சட்டமறுப்பு இயக்கத்தை ஒப்புக்கொள்ளவில்லை. சாஸ்திரியாரின் அச்சம் ஆதாரமற்றதல்ல என்பதை தற்காலத்தில் நடந்துவரும் நிகழ்ச்சிகள் நிரூபித்துவிட்டன.'' சாஸ்திரியாரின் நூற்றாண்டுவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு நடந்த கூட்டத்தில் பேசியவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

முன்னாள் ஹைகோர்ட் நீதிபதி திரு பஷீர் அகமது சையத் தலைமை வகித்தார். ''சட்டமறுப்பு இயக்கம் போன்ற பொதுஜன இயக்கங்கள் மற்ற சந்தர்ப்பங்களிலும் தலை காட்டி, நாட்டை குழப்பத்திலும் அராஜகத்திலும் ஆழ்த்திவிடும் என்று சாஸ்திரியார் கருதினர். தற்காலம் நாம் பலவிதமான பொதுஜன கிளர்ச்சிகளைக் காண்கிறோம். இந்தச் சூழ்நிலையில் சாஸ்திரியார் அன்று சொன்னது சரியல்லவா என்பதைச் சிந்திக்கவேண்டும்' என்று அவர் தலைமையுரையில் கூறினர்.

திரு. டி. எஸ். வெங்கட்ராமய்யர் பேசுகையில், அறிவை விட உணர்ச்சி தலை தூக்கி நிற்கும் தற்கால நிகழ்ச்சிகள், மகாத்மாஜியின் சட்டமறுப்பு இயக்கம் பற்றி சாஸ்திரியார் கொண்டிருந்த கருத்துக்களை மெய்ப்பித்துவிட்டன என்றும், சாஸ்திரியார் உணர்ச்சிகளை அறிவுக்குள் அடக்கிவைத்திருக்கும் ஆற்றல் படைத்திருந்தார் என்றும் கூறினர்.

விழாவைத் துவக்கிவைத்த முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம், திரு சாஸ்திரியார் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் சிறந்த பேச்சாளர் என்றும், அவர் பண்பாட்டின் உருவாக திகழ்ந்தார் என்றும் கூறினர்.

ஒரு நல்ல மத்ய ஸ்தாபனம் ''இந்தியப் பெரியார்கள்'' பற்றிய நூல் ஒன்று வெளியிடவேண்டும் என்றும், அதில் சாஸ்திரியாரின் வாழ்க்கையும் கருத்துக்களும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்றும் நீதிபதி திரு. பி. பாலகிருஷ்ணன் கூறினர்.

திரு. சாஸ்திரியார் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தைப் பற்றி திரு, கே. பாலசுப்பிரமணிய ஐயர் எடுத்துரைத்தார். கடைசிக் காலம் வரை ஒரு உண்மையான இந்திய ஊழியராக விளங்கினர் என்றர்.

திரு. எஸ். வை. கிருஷ்ணசாமி, டாக்டர் வி ராகவன் ஆகியோரும் பேசினர்கள்.

திரு. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்றர். லட்சுமிபுரம் இளைஞர் சங்கம் இந்த விழாவை நடத்தியது.

### கண்காட்சி

மகாகனம் சாஸ்திரியாரின் பலதுறை வாழ்க்கைச் சிறப்புகளை சித்தரிக்கும் கண்காட்சியை அவருடைய நெருங்கிய சகாவான திரு. பி. கோதண்டராவ் ஞாயிறன்று காலை மயிலை சாஸ்திரி ஹாலில் திறந்துவைத்தார்.

சாஸ்திரியாரின் கையெழுத்துப் பிரதிகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல பத்திரிகைகளில் பிரசுரமான அவரது உரைகளின் போட்டோ பிரதிகள் லண்டனும், எடின்பர்க்கும் அவருக்கு வழங்கிய கௌரவ பட்டயம், ஹிந்து ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் பதவி நியமன உத்தரவு, சாஸ்திரியார் உபயோகித்த லெப்ஸ்டர் அகராதி போன்றவை கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. ''என்னைக் கவர்ந்த புத்தகங்கள்'' என்பது பற்றி ஒலிப்பதிவு செய்யப்பட்ட சாஸ்திரியாரின் 15 நிமிஷ உரையையும் இக்கண்காட்சியில் கேட்கலாம்.

இக்கண்காட்சியைத் திறந்துவைக்க வர இயலாது போனதால் கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் ஒரு செய்தியனுப்பியிருந்தார். சாஸ்திரியார் உயிருடன் இருந்தால் தற்கால அரசியல் பொதுவாழ்வில் காணப்படும் தீவிரவாதத்தையும் கண்ணியக்குறைவையும் கடுமையாகச் சாடியிருப்பார் என்று நெடுஞ்செழியன் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''சுதந்திரத்தின் இன்பத்தை வர்ணிக்க இயலாது. சுதந்திரத்தைக் கொஞ்சக் காலம் இழந்திருந்தவர்களுக்குத்தான் அதை பூரணமாக உணர்ந்து அனுபவிக்க முடியும்'' என்று சாஸ்திரியார் கூறியிருப்பதையே அவருடைய தேசபக்திக்கு எடுத்துக்காட்டாக நெடுஞ்செழியன்சுட்டிக்காட்டினர்.

''பொதுஜன ஆதரவைப் பெறுவதற்காக சாஸ்திரியார் தமது லட்சியத்தையும் கோட்பாடுகளையும் ஒருபோதும் விட்டுக்கொத்ததில்லை. அதனால்தான் அவர் மக்கள் தலைவராயில்லாமல் அறிவாளிகளின் தலைவராக விளங்கினர். அவர் கடைப்பிடித்த வழி மிருதுவானதும் சட்டபூர்வமானதுமானதுமாகும். காந்தியாருடன் அரசியல் துறையில் கருத்து வேற்றுமை கொண்டிருந்தாலும் கடைசிவரை சாஸ்திரியார் காந்தியாருடன் அன்னியோன்னிய உறவுகொண்டிருந்தார். காந்தியாருக்கும் சாஸ்திரியாருக்குமிடையே இந்த உறவு நிலைபலருக்கும் ஒரு நல்ல படிப்பனையாகும்'' என்று நெடுஞ்செழியன் தமது செய்தியில் பாராட்டியிருந்தார்.

---

# ஆமதாபாத் கலவரங்களில் பலியானவர் தொகை 350

## பிரதமர் இந்திரா கவலை

புதுடில்லி, செப்.23

ஆமதாபாத்திலும் பரோடாவிலும், கலவரங்களிலும், பொலிஸ் ராணுவ துப்பாக்கிச்சூட்டினுலும் கொல்லப்பட்டவர்களின் தொகை 350க்கும் அதிகமாகியிருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன.

கலவரப்பகுதிகளை ராணுவம் முழுமையாக தன் பொறுப்பில்எடுத்துக்கொண்டுள்ளது. நேற்றிரவு கலவரங்கள் வெகுவாகக் குறைந்திருந்ததாகக் கூறப்பட்டது.

காந்தி நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்த சமயத்தில் காந்திஜி பிறந்தமண்ணில் வகுப்புக்கலவரங்கள் வெடித்திருப்பது பெரிதும் கவலையளிப்பதாகப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிருர். இந்தச் சம்பவங்கள் குறித்து இந்தியர்கள் அனைவரும் வெட்கமுறவேண்டும் என்று அவர் சொன்னர். இந்தச் சம்பவங்கள் நாட்டின் ஆதாரக்கொள்கைகளுக்கேமுரண்பட்டவையென்று பிரதமர் குறிப்பிட்டார்.

ஆமதாபாத்தில் கலவரங்கள் ஒயும்வரை முன்னாள் துணைப்பிரதமமந்திரி திரு. மொரார்ஜிதேசாய் உண்ணாவிரதம் இருந்துவருவது பற்றி நிருபர்கள் திருமதி காந்தியிடம் கேட்டார்கள். ''வகுப்பு ஒற்றுமைக்காக உண்ணாவிரதம் இருப்பது மகாத்மாவுக்கு இசைவானதே'' என்று பிரதமர் கூறினர்.

---

## தடுப்பு மருந்து விநியோகம்

வேலணை, செவ்.

இளம்பிள்ளைவாதம் வராமல் தடுக்கும்பொருட்டு தீவுப்பகுதி வைத்திய அதிகாரி டாக்டர் திரு. ஆர். தெய்வேந்திரம் தலைமையில் அவ்வப்பகுதி உத்தியோகஸ்தர்களும், தொண்டர்களும் தீவுப்பகுதியில் உள்ள 4 மாதம் தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து கொடுத்து வருகிருர்கள்.

---

## கட்சிக் கிளை திறக்கப்பட்டது

மண்டைதீவு, திங்கள்

மண்டைதீவு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் மண்டைதீவுக்கிளை அலுவலகத்தை, இன்று நண்பகல் கிளிநொச்சித் தொகுதியின் ஆட்சிமன்ற உறப்பினருமான திரு.கா.பொ.இரத்தினம் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார்.

## பதுளை மாநகர சபை தேர்தல்

பதுளை, செவ்வாய்

பதுளை மாநகர சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் அடுத்தமாதம் 27-ம் திகதி தாக்கலாகும் 15 வட்டாரங்களிலும் யு. என். பி. போட்டியிட முடிவு செய்திருக்கிறது. பலர் புது முகங்கள், இளைஞர்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் போட்டியிடவிருக்கும் ஒரு வட்டாரத்தில் லங்காசமசமாஜக்கட்சி அபேட்சகர் ஒருவரும் போட்டியிட விருப்பதாக பேச்சுகள் அடிபடுகின்றன.

......

### கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 29-ம் திகதி தலைவர் டாக்டர் துரைசிங்கத்தின் தலைமையில் யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

0 0 0

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது

(தே. நி)

---

## குருடர்- செவிடர் நிதிக்கு ஏற்பாடு

கோட்டை, செவ்.

இலங்கை குருடர் செவிடர் பாடசாலைகளுக்கான நிதியை உயர்த்துவது சம்பந்தமாக திருமதி ஆர். கதிர்காமர் (கடற்படை கமாண்டரின் மனைவி), தலைமையில் கூடி குழுவொன்று ஆராய்ந்தது. ருபா 50,000 வரை நிதியை உயர்த்துவதற்கு முதலில் சர்வதேச உணவுக் கண்காட்சி ஒன்றை ஏற்பாடுசெய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

திருமதி ஆர். கதிர்காமர், திருமதி டி. எஸ். அட்டியகலை (இராணுவ கமாண்டர் மனைவி) திருமதி கே. கனகசுந்தரம் (இந்தோனேசிய முன்னாள் தூதுவரின்மனைவி) ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்,

---

## கைச்சாத்தானது

கொழும்பு, செவ்.

கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேச தொலைபேசி அபிவிருத்தித் திட்டத்தின் முதலாவது பகுதிக்கான ஏழுகோடி ரூபா ஒப்பந்தம் ஒன்று நேற்றுக் கைச்சாத்தானது. இவ் வைபவம் கோட்டை கீழ் சதாம் வீதியில் உள்ள பொதுவேலை தபால் போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது இலங்கை அரசாங்கத்திற்கும் யப்பானிய வர்த்தக ஸ்தாபனமான டோக்கியோ மிட்சூயி அன் கொம்பனிக்குமிடையே இவ்வொப்பந்தம் கைச்சாத்தானது. இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திரு வேர்ணன்அபயசேகரா கைச்சாத்திட்டார்.

இத்திட்டத்தின் முதலாவது கட்டத்தில் தென் மத்திய மேற்கு மாகாணங்களுக்கிடையில் நேரடியாகத் தொலைபேசித் தொடர்புகள் வைத்துக்கொள்வதற்கு வசதிகள் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி நாவலர் லேனில் வீடு கட்டுவதற்கான 3 பரப்புக் காணி. பட்டணத்திலிருந்து 1/2 மைல் தூரம். பஸ் பாதையிலிருந்து 40 யார் தூரம். விளம்பர இல. 1421, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1421

நன்னீர் கிணறு, கொங்கிறீட் தண்ணீர்தாங்கி, சிறந்த மண்வளம் ஆகியவற்றுடன் முற்பக்கம் கோயில் வீதியும் வேளாள வகுப்பினர் வாழும் சுற்ருடலும் கொண்ட 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விரும்பின் 4 பரப்புகள் கொண்ட இரு துண்டுகளாகவும் விற்கப்படும். புரூக்கர் இல்லாது நேரடியாகத் தொடர்பு கொள்வதே விரும்பப்படும். Fry, 67, கோயில் வீதி, பிரையர் வளவு, யாழ்ப்பாணம். 1417

க. பொ த. சாதாரண, உயர்தர பரீட்சைகளுக்குரிய வர்த்தகம், பொருளாதாரம், ரசாயனம் ஆகிய விசேட தொகுப்புக்கள் விற்பனைக்குண்டு. இவற்றை எம்மிடம் வாங்கிப்படித்துப்பல மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வர்த்தகக் கல்லூரி பருத்தித்துறை. (1924-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது) 1428

### தேவை

கிளிநொச்சியில் இருக்கும் ஒரு பிரபல அடைவு கடையைப் பொறுப்பேற்று நடத்தவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1426, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1426

### கல்வி

தட்டச்சு (Typewriting) பயில விரும்பும் ஆண், பெண் இருபலாரும் தொடர்பு கொள்ளவும். சபா, நாகராஜன், இல. 70, கோர்ட் வியூ, சாவகச்சேரி. 1427

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 24—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன்ட் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 49 மீ**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாணவர்மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 வானெலி குறுக்கெழுத்துப்போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-12 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


ஷெல் கம்பெனியாரால் விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் தயாரிக்கப்பெற்ற மிகத் திறமைவாய்ந்த

**P. E. - 4 சொலிக்கனம்**

உங்கள் பொருட்கள் தலைமுறை தலைமுறையாக பாவிக்கக் கூடிய வகையில் பாதுகாப்பது

மற்றும்

**திறமான பிற்றிமினஸ் அன்டிக்குறேஸ்**

சிகப்பு, பச்சை, கருப்பு, அலுமினியம், கிரே ஆகிய கலர்களில் கிடைக்கும்

ஏகவிநியோகஸ்தர்கள்


## புதிய ஜே பி.



யாழ்ப்பாணம், புதன்

பேராசிரியர் திரு. கே. நடராசா சமாதான நீதவானுக நியமனம் பெற்றுள்ளார். பிரபல ரேகை சாஸ்திர நிபுணரான இவர் அளவெட்டியில் கௌரவமான குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவராவர். இவருடைய தந்தையார் காலஞ்சென்ற திரு. என். காசிப்பிள்ளையாவார். இவருடைய பெயரால் மலேஷியாவில் "காசிப்பிள்ளை வீதி" என்ற பெயருடன் வீதி ஒன்றிருக்கிறது.

யோகசுவாமிகளின் கருத்துக்களில் பெருந்த ஈடுபாடு உடைய இவர் கல்வி சமய, சமூக சம்பந்தப்பட்ட பல கட்டுரைகளை எழுதியிருக்கிருர்.

## 4 கோல்களால் புனிதவளன் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்திளுல் யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் புனிதவளன் விளையாட்டுக் கழகம் மிகவும் திறமையாக விளையாடி ஆட்ட இறுதியில் அடுத்தடுத்து 4-0 கோல்களைப் போட்டு நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது. புனிதவளன் கழகத்தைச் சேர்ந்த வீரர்களான மகேந்திரன் சந்தியாப்பிள்ளை றிச்சேட் ஆகியோர் முறையே 2, 1, 1, கோல்களைப் போட்டனர்.

கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு குமரையா மத்தியஸ்தராக கடமையாற்றினுர். தே. நி

## ''தமிழ்த்தலைவர்களை ஒன்றுபடுத்த இளைஞர் இயக்கம் தோன்றவேண்டும்''

### சுன்னுகம் கருத்தரங்கில் பேராசிரியர் கருத்து

உடுவில், செவ்வாய்

''நம்மிடையே இன்று காணப்படும் பகைமை, ஒற்றுமையின்மை போன்றவற்றைச் சிங்கள மக்கள் உணர்ந்துவிட்டனர். இதனுல்தான் எமக்குக் கிடைக்கவிருக்கும் பல வசதிகள் கைநழுவிப் போய்விடுகின்றன.

எல்லா மக்களும் ஒன்றுக இருப்பது கஷ்டமாகலாம். ஆனல் அவர்களை வழிநடத்தும் தலைவர்கள் ஒன்றுபட்டிருக்கவேண்டும். தமிழ் இனத்துக்காகப் போராட வந்துள்ள தமிழ்க்கட்சிகள், ஏன் தமிழர் நலன் கருதி ஒன்றுகக் கூடிச் செயல்படக் கூடாது?''

பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் கே. குலரத்தினம் சுன்னுகம் பட்டின சபைக் கருத்தரங்கில் பேசியபோது மேற்கண்டவாறு கூறினர்.

உடுவில் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் டாக்டர் கே. குலரத்தினம் 'வட இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் பிரச்னைகள்' என்னும் பொருள் பற்றிப் பேசினர். பட்டின சபையின் விளையாட்டு மைதானத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

பேராசிரியர் மேலும் பேசியதாவது:

தமிழ் நாட்டிலே முதலமைச்சர் கருணநிதிக்கும்-நெடுஞ்செழியனுக்கும் இடையில் ஏற்பட்ட வேற்றுமை மனப்பான்மை கட்சியைப் பிளவுபடுத்தி, ஒற்றுமையைச் சிதறடிக்கும் என்பதை உணர்ந்த இளைஞர்கள், தம் சக்தியை வெளிப்படுத்தி அவர்களை இணையவைத்தனர். நம் நாட்டிலும் இதே முறையில் இளைஞர் இயக்கம் ஆரம்பமாகி, இன்றுள்ள தலைவர்களை ஒன்றுபடச் செய்யவேண்டும் அல்லது அரசியலைவிட்டு அவர்கள் ஒதுங்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டும். சிங்கள அமைச்சர்களுக்கு நமது உரிமைகளைத் தருவதில் பல இடையூறுகள் இருந்தாலும் ஒற்றுமையின்மையையே முக்கியமாகக் கூறித் தட்டிக் கழித்துவிடுகிருர்கள். சிங்கள சமூகத்தினர் நமக்கு முற்றிலும் விரோதிகளல்லர்.

தமிழ்மக்கள் அரசாங்கத்...

மயாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பனைத் தொழில் விருத்தி அவசியமானது. இதனல் நிறையப் பயனுண்டு. அத்துடன் ஐப்பான் நாட்டு மீன்பிடித் தொழில் போன்று நாமும் கூடியளவில் முத்துக் குளித்தல், மீன்பிடித் தொழிலில் ஈடுபடவேண்டும்.''

'தமிழ் மாணவருக்கு

## பூரணமான பல்கலைக்கழகம் விரைவில் வேண்டும்''

கோப்பாய், செவ்வாய்

''தமிழ் மாணவர்களுக்கென தனியான பூரணத்துவமுடைய பல்கலைக் கழகமொன்றை விரைவில் அமைக்க அரசாங்கத்தைக் கோருவதுடன் இவ்விஷயத்தில் தமிழ்த்தலைவர்களை ஒன்றுபட்டுழைக்க கேட்டுக்கொள்வது'' என்னும் தீர்மானமொன்று எதிர்வரும் அக்டோபர் 3-ம் திகதி யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 18-வது வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அரசாங்கத்தைக்கோரும் மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

'போதனு மொழி தாய்மொழியாகவே இருக்கவேண்டும்'

'வெளிமாகாணங்களிலுள்ள ஆசிரியர்கள் மாணவர்கள் நலன்கருதி கொள்கை அடிப்படையிலான பொது இடமாற்றம் 1970லும் நடைபெறவேண்டும்'

'தமிழ் ஆசிரியர் வெற்றிடங்களை உடன்நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்'

பதவியுயர்வு பதவிக்கால கணக்கெடுப்பிலிருந்து வழங்கப்படவேண்டும்'

## வங்காலை மக்களுக்கு குடிநீர் வசதி

முசலி, செவ்.

வங்காலை கிராமச்சபை மக்களுக்கு இவ்வளவு காலமும் ஒரேயொரு தண்ணீர் விநியோக நிலையம் மட்டுமே இருந்து வந்தது. இந்தநிலையத்திலிருந்து தான் வங்காலைக்கிராமம் முழுவதற்கும் இதுவரையில் நீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது, அதனுல் இக்கிராம மக்கள்பெரிதும் சிரமப்பட்டு தண்ணீரைப்பெற்றுக்கொண்டிருந்தனர்.

சமீபகாலத்தில் வங்காலைக் கிராமச்சபையின் தற்போ...

## ஆங்கிலத்துக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி அலுவலகத்தில் தமிழில் கொடுக்கப்படும் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் பதில் தரப்படுவதை தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் வன்மையாக ஆட்சேபித்துள்ளது.

சௌக்கிய அதிபதி தொடக்கமாக, மாவட்டவைத்திய அதிபர்கள் வரையும் கடிதத் தொடர்புகள் தமிழில் செய்துவருவதுடன் எமக்கும் தமிழில் பதில்கிடைத்து வருவதாக சங்க பொதுக் காரியதரிசி திரு, மா. ஐயன்ஞ தெரிவித்தார்.

## அமைச்சரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, செவ்.

கிழக்கிலங்கை பேப்பர் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர் வாழைச்சேனை மட்டக்களப்புக்கிடையில் நல்ல ரயில் சேவையை ஏற்படுத்தித்தருமாறு போக்குவரத்து அமைச்சரிடம் கோரியுள்ளனர். வேலைக்கு வருவதற்கும், திரும்பிச்செல்வதற்கும் இங்கு கடமையாற்றும் தொழிலாளர்களுக்கென விசேஷ ரயில் சேவையை நடாத்தித்தருமாறு அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியிருக்கின்றனர்.

## வேலணை பிரசவ விடுதி

வேலணை செவ்,

வேலணை மருத்துவ மனையில் சிகிச்சை பெறுபவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உணவு மற்றும் குடிதண்ணீர் வசதி இல்லை எனவும் பிரசவ நேரத்தில் நேரத்தைக் கணக்கிட ஒரு ...

## இன்று யாழ் வரும் கொழும்புகிரிக்கெட்கோஷ்டி

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பு கிரிக்கெட் போட்டிகளில் முன்னணி வகிக்கும் தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகம் இன்று யாழ்ப்பாணம் வருகின்றது. இக் கழகம் இன்றும் நாளையும் யாழ்ப்பாண கிரிக்கட் கோஷ்டி வீரர்களுடன் ஒரு சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டியில் கலந்து கொள்ளும்.

தமிழ்யூனியன் கோஷ்டியில் இலங்கையில் தற்போது முன்னணி வகிக்கும் பல கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இக்கோஷ்டிக்கு திரு. எஸ். எஸ். குமார் தலைமை தாங்குகின்ருர்.

யாழ்ப்பாணக் கோஷ்டியின் சார்பில் பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர்களான சூரியகுமார், ஜெகதீசன்,

(6-கலம் பார்கக)


''புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்''

**ஏ, எவ், றேமண்ட்ஸ்,**

147, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில் மனம்நிறைந்த

அந்திய சேவை ரூபா 175/-

உயர்தர பிரேதப் பெட்டிகள் ரூபா 50/-



**இ.போ ச.சிற்றுண்டிச்சாலை**

**யாழ்ப்பாணம் - பருத்தித்துறை**

கோண்டாவில், பருத்தித்துறை பஸ் நிலையங்களில் சாப்பாடுகள், சிற்றுண்டிகள் முதலியவை வழங்குவதற்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இலங்கைப் போக்குவரத்து சபை, யாழ்ப்பாணம் பிராந்திய முகாமையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்காரர்கள் ரூ 10 வைப்புப் பணமாகச் செலுத்தி அவசியமான பத்திரங்களை மேற்குறிப்பிடப்பட்டவரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரத்துக்கான முடிவு திகதி 12-10-1969 பி. ப. 1 மணி. 1763




82வது தினம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ



**குழந்தைக்காக**

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

மாதர்களுக்கு அரைக்கட்டணம்.



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த

**எங்க ஊர் ராஜா**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திறமான பிற்றிமினஸ் அன்டிக்குறேஸ்

சிகப்பு, பச்சை, கருப்பு, அலுமினியம், இரே ஆகிய கலர்களில் கிடைக்கும்

ஏகவிநியோகஸ்தர்கள்

# ஸ்டீல்சன்ஸ்,

ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்.

போன்: 7035


# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 8-ந் திகதி (24-9-69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** தடைகள் பல தாக்கும். எதிர்பார்த்த காரியத்தில் ஏமாற்றம் தென்படும், சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படலாம். மேலதிகாரிகளின் கழுகுப் பார்வை உங்கள் மீது பதியும். எதிலும் நிதானம் வேண்டும்.

**ரிஷபம்-** நீண்டநாள் பிரச்னையில் இன்று நல்லமுடிவு ஏற்படும். கல்வித்துறையில் புதிய ஆர்வம் பிறக்கும். தாய்வழி ஆதரவுக்கு இடமுண்டு. தெய்வநம்பிக்கையுடன் செய்தொழிலிலும் முன்னேற்றம் தென்படும்.

**மிதுனம்-** வாழ்க்கை இன்று கரும்புபோல் இனிக்கும். இல்லறத்திலும் பிணைப்புகள் இறுகும். பந்துசனங்ளின் ஆதரவுக்கும் இடமுண்டு. குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரலாம் இரக்கசிந்தைமேலிடும்.

**கடகம்-** பூமிப் பிணக்கால் புதிய தொல்லைகள் தலைகாட்டும். வழக்கு விவகாரங்களுக்கும் இடமுண்டு. சட்ட ஆலோசனைக்காகப் பெருந்தொகை செலவாகலாம். பழிவாங்கும் உணர்ச்சியும் தோன்றலாம். அடக்கம் வேண்டும்.

**சிம்மம்-** காதலர் வாழ்க்கையில் இன்று பொன்னான தினம். கருத்துவேற்றுமைகள் மறைந்து ஒற்றுமை பலப்படுத்தப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். பெரியோர்கள் ஆதரவு தவறாமல் கிடைக்கும்.

**கன்னி-** நண்பர்கள் தொடர்பால் நஷ்டமுமடைவதற்கு இடமுண்டு. நம்பிக்கை மோசடியும் நடைபெறலாம். சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் உங்கள் அமைதியைக் குலைக்கும். எவ்விடயத்திலும் முன்னெச்சரிக்கை வேண்டும்.

**துலாம்-** தெய்வநம்பிக்கையில் அதிக ஈடுபாடு ஏற்படும். புண்ணிய காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள். நீண்டதூரப் பயணத்துக்கும் திட்டமிடப்படலாம் உடல்நலம் சிறிது பாதிக்கப்படும். சுகாதாரம்வேண்டும்.

**விருச்சிகம்-** தொழில்துறையில் புதிய மாற்றங்கள் உருவாகும். சிலருக்கு பதவிஉயர்வுகூடக் கிடைக்கலாம். முதலாளியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். வெளியிடத் தொடர்புகளிலும் சிறப்புக்கிடமுண்டு.

**தனுசு-** மக்களால் மகிழ்ச்சியுடன், பொருளாதாரத் துறையும் திருப்திகரமாக இருக்கும். புதிய முயற்சிகள் மூலம் பொருளீட்ட விரும்புவீர்கள். தூரத்துச்செய்தியொன்று உங்களை வியப்பிலாழ்த்தும். நல்லதினம்,

**மகரம்-** கொடுக்கல் வாங்கல் மூலம் அபிப்பிராய பேதம் உருவாகும். உங்களிடம் உதவிபெற்றவர்களே மறைமுகச் சூழ்ச்சிகளில் ஈடுபடுவார்கள். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும். நாவடக்கம் நன்மை தரும்.

**கும்பம்-** எதற்கெடுத்தாலும் எரிந்துவிழுவீர்கள். சிறிய விடயம் கூட உங்களுக்கு அதிக ஆத்திரத்தை ஏற்படுத்தலாம். சிலருடைய குறுக்குவழித் தலையீடு உங்கள் பொறுமையைச் சோதிக்கும். அமைதியுடன் இருப்பது நன்று

**மீனம்-** பேச்சுவன்மையின் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர். குடும்ப வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் உருவாகும். இன்று மனம்போல யாவும் நடக்கும். சுபதினம்.

2, 1, 1, கோல்களைப் போட்டனர்.

கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு குமரையா மத்தியஸ்தராக கடமையாற்றினார். தே. நி

## மெய்வல்லுனர் விளையாட்டுபோட்டி

யாழ்ப்பாணம், புதன்

விளையாட்டமைச்சினால், யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களிடையே, யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில், 'அரியாலை சன சமூக நிலையம்' முதலாவதாகவும், 'குருநகர் சன சமூக நிலையம்' இரண்டாவதாகவும், 'கந்தர்மடம் சன சமூக நிலையம்' மூன்றாவதாகவும் வந்தன.

இப்போட்டிக்கு யாழ்ப்பாண காரியாதிகாரி திரு. எச். இ. பிள்ளைநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். வெற்றிபெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் திருமதி பிள்ளைநாயகம் பரிசில்களை வழங்கினார். (தே. நி.)

வடமாகாண

## சாம்பியன் போட்டியில் விளையாடும்

பூநகரி, செவ்,

பூநகரி காரியாதிகாரி பிரிவில் நடத்தப்பட்ட தாச்சிப் போட்டிகளில் வெற்றியீட்டி சாம்பியன் இடத்தைப்பெற்ற விக்டோரியாக் கழகத்தினர் கிளிநொச்சியிலும்பளைக் காரியாதிகாரி பிரிவிலும் வெற்றியீட்டியுள்ளனர், கிளிநொச்சி றேட்டிக்கோ பூங்காவில் ஆரோகணம் விளையாட்டுக கழகத்துக்கும் விக்டோரியாவுக்கும் நடந்த போட்டியில் மூன்று பழங்களாலும் பளை சந்தை மைதானத்தில் பளை சென் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் விக்டோரியாவுக்கும் நடைபெற்ற போட்டியில் 12 பழங்களாலும் பூநகரி விக்டோரியாக்கழகம் வெற்றியீட்டியுள்ளது. கிளிநொச்சித் தொகுதியில்சாம்பியன் இடத்தைப் பெற்ற இக் கழகம் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில்நடைபெறும் வடமாகாணச்சாம்பியன போட்டியில் கலந்து கொள்ளும்.

## நன்கொடை

கண்டி, செவ்வாய்

கண்டியிலுள்ளபெரியஆஸ்பத்திரியை மேலும் விஸ்தரிப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் 9 லட்சம் ரூபா நன்கொடைப்பணம் வழங்கியுள்ளது.

ஒற்றுமை... மையையேமுக்கியமாகக் கூறித் தட்டிக்கழித்துவிடுகிறார்கள். சிங்கள சமூகத்தினர் நமக்கு முற்றிலும் விரோதிகளல்லர்.

தமிழ்மக்கள் அரசாங்கத்தின் சிறு உதவியுடன் தமது பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கையை விடக் குறைந்த நீர்வீழ்ச்சியைப்பெறும் இஸ்ரேல் நாட்டில் பாலும் தேனும் ஓடுவதாகக் கூறுகிறார்கள். காரணம், பெறும் குறைந்தளவு நீரைப் பக்குவமாக்கி, அளவுடன் பயன்படுத்துவதே நாமும் குளங்களில் நீரைத் தேக்கி, கட்டுப்பாட்டுடன் அதைப் பயன்படுத்தவேண்டும்.

## திருநெல்வேலியில் நாடக விழா

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி இளைஞர் முத்தமிழ்க் கலாமன்றத்தினர் அடுத்த மாதம் 8, 9, 10ந் திகதி ஆகிய மூன்று நாட்களும் முடமாவடிச் சந்தியிலுள்ள திறந்தவெளியில் நாடக விழா நடாத்தவிருக்கிறார்கள். கலாநிதி சு. வித்தியானந்தன் இவ்விழாவை ஆரம்பித்துவைப்பார்.

மூன்று நாள் விழாவிலும் இரண்டு வானொலி நாடகங்களும், இரண்டு நாட்டிய நாடகங்களும், நான்கு புராண சரித்திர நாடகங்களும் மேடையேற்றப்படவிருக்கின்றன. (கா. நி)

## வரலாற்றுமன்ற உத்தியோகஸ்தர்

பருத்தித்துறை, செவ்.

நெல்லியடி மத்திய காவித்தியாலய வரலாற்றுஅரசியல் மன்றப் புதிய உத்தியோகத்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எம். சிறீஸ்கந்தராசா, உபதலைவர் எம். காந்திமதிநாதன், செயலாளர்: திரு பீ. சோமாஸ்கந்தராசா, உப செயலாளர் திரு எம். ஜெயதரன், தனாதிகாரி திரு கே. சின்னராசா. 10 பேர் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஆண்டு விழா

அராலி, செவ்.

அராலி தெற்கு சனசமூக நிலையத்தினர் தமது 21-வது ஆண்டு நிறைவு விழாவை இம்மாதம் 23-ம் திகதி கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். இவ் விழாவில் யாழ்ப்பாணத் தொகுதி எம் பி. கலந்து கொண்டு உரையாற்றுவார்.

யோகம் செய்யப்பட்டு வந்தது, அதனால் இக்கிராம மக்கள்பெரிதும் சிரமப்பட்டு தண்ணீரைப்பெற்றுக்கொண்டுவந்தனர்.

சமீபகாலத்தில் வங்காலைக் கிராமச்சபையின் தற்போதய தலைவர் திரு. செ. இம்மானுவேல்குருஸ் எடுத்த நடவடிக்கை காரணமாக தண்ணீர் விநியோகஸ்தானங்கள் அமைப்பதற்கான ஆக்கவேலைகள் துரிதமாகி நடைபெற்றுக்கொண்டுவருகின்றன.

இத்திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரத்தினம் டான்போத்தும் மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோனும் பெரிதும் உழைத்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வயல்களுக்குச் செல்லமுடியாதநிலை

உருத்திரபுரம், திங்கள்

உருத்திரபுரத்திலுள்ள சிவநகர்மக்களுக்குக்கொடுக்கப்பட்ட வயல்காணிகளுக்கு அவர்கள் செல்ல முடியாத நிலை இப்போது ஏற்பட்டுள்ளது, சிலர் அத்துமீறி காணிகளைப் பிடித்து முள்வேலி போட்டுள்ளதாலேயே இந்தநிலை தோன்றியுள்ளது.

இதுசம்பந்தமாக கிளிநொச்சி எம். பி. திரு. கா, பொ. இரத்தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## அனுதாபம்

மல்லாகம், திங்கள்

மல்லாகம் கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் முன்னைநாள் தலைவர் திரு. கு. வைத்திலிங்கத்தின் மரணம் குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## இன்னும் பூர்த்தியில்லை

பருத்தித்துறை, செவ்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தேசியமய சேவை, விளையாட்டு அமைச்சர் திரு. வி, ஏ. சுகததாசாவினால் அத்திவாரக்கல் நாட்டப்பட்ட பருத்தித்துறைப் புதிய தபாற் கந்தோர் கட்டட வேலைகள் இன்னும் பூர்த்தியடையாத நிலையிலுள்ளன.

## தீர்மானம்

வேலணை, செவ்

நிதி நிலைமையை ஆராய்ந்து வசதிக்கேற்ப குடிதண்ணீர்த் தொட்டியொன்றை சந்தைக்கட்டிடத்திற்கு அருகாமையில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சபை மாதாந்தககூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலணை மருத்துவ மனையில் சிகிச்சை பெறுபவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உணவு மற்றும் குடிதண்ணீர் வசதி இல்லை எனவும் பிரசவ நேரத்தில் நேரத்தைக் கணக்கிட ஒரு மணிக்கூடு இல்லையெனவும் இங்குள்ள ஒரேயொரு கிணறு பல வருடங்களாக சுத்திகரிக்கப்படாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. மருத்துவமனையைச் சுற்றி வேலி இல்லாதிருப்பதால் கால்நடைகள் தங்கி அசுத்தமேற்படுகிறதாம்.

## இருநாடகங்கள்

மண்டைதீவு, செவ்.

அல்லைப்பிட்டி அண்ணா நாடகமன்றத்தின் 'காதலா கடமையா' என்னும் நாடகமும் மண்டைதீவு கருணா நாடகமன்றத்தின் 'ஒருதாய் மக்கள்' என்னும் நாடகமும் மண்டைதீவு மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் மேடையேற்றப்பட்டன.

இந்த நாடகங்களுக்கு மண்டைதீவு கிராமசபை அக்கிராசனர் திரு க. கைலாசபிள்ளை தலைமை வகித்தார்.

7-ம் கலத் தொடர்ச்சி

தெய்வேந்திரா, சுரேந்திரா நடராசசுந்தரம், குலநாதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (தே, நி.)


**வெஸ்லி சினிமா**

மானிப்பாய்

தினசரி6-30, இரவு10-00

பிரிபோயா, போயா 2-30மணி

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த

**தாயின் மடியில்**

வல்வெட்டித்துறை

**ரஞ்சனா தியேட்டர்**

தினசரி 6-30, 9-30.

பிரிபோயா, போயா காலை 10-30

ஜெய்சங்கர்-எல். விஜயலக்ஷ்மி நடித்த

**உயிர்மேல் ஆசை**

**MANOHARA**

JAFFNA

Daily 4-45, 7, & 9-45p m

Jules Buck-Peter O'toole Production of George Bernard Shaws

GREAT CATHERINE

(Technicolor)

**REGAL** JAFFNA

Daily4-45, 7-00&9-45p.m

Poya, Prepoya 4 Shows

Andrey Hepburnr

Albert Finney

in

TWO FOR THE ROAD

(Adults only)

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த

**எங்க ஊர் ராஜா**

அப்பல்லோ-11 டெக்னிக்கலரில் காண்பிக்கப்படும்.

Also Showing

APOLLO 11 in color-for 15 minutes,

**யாழ் - வின்ஸர்**

தினசரி — 4 காட்சிகள்


★ எம். ஜி. ஆர். - ★ ஜெயலலிதா

நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன் நடிக்கும்

**புதியபூமி**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா வெலிங்டன் (யாழ்நகர்) 2-30 6-30-930

திரைகளில்



ரங்காராவ் ★ அஞ்சலிதேவி

பாலையா ★ பேபி ரோஜாரமணி

மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். அளிக்கும்

**பக்த பிரகலாதா**

[ஈஸ்ட்மன் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) மைலன் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு)

ஆகிய திரைகளில்

ரி. ஆர். ராமண்ணாவின் டைரக்‌ஷனில் உருவாகி

ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ

நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி

வசந்தா ★ மனோகர்

நடித்த

ஜரிஸ் மூவிஸாரின்

**நீயும் நானும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எனது ஒத்துழையாமை பகைமையில் வேரூன்றியிருக்கவில்லை. அன்பில்தான் வேர்விட்டிருக்கிறது. இது எனது சமயக்கோட்பாட்டின் முதற்பொருளாய் உள்ளது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதிமாதம் 8-ந் திகதி (24 - 9 - 69)


## அரசியல் அமைப்பில் மாறுதல்

டொனமூர் அரசியல் அமைப்புத் திட்டத்தை இலங்கையில் புதிதாக அமுலுக்குக்கொண்டு வந்தபோது, அதன் சிறப்பு அம்சங்களில் ஒன்று கமிட்டிமுறைதான். அந்த ஏற்பாடு இப்போதுள்ள 'கபினெட்' எனும் மந்திரிசபை முறையைவிட அதிக ஜனநாயகமானதாகும். மந்திரி சபை ஏற்பாட்டின்படி பார்லிமெண்டிலே பெரிதாகவுள்ள கட்சியின் தலைவரை கவர்னர் ஜெனரல் அழைத்து அரசாங்கத்தை அமைக்கும் அதிகாரத்தையும் பொறுப்பையும் அவருக்கு அளிக்கின்றார் பிரதமர் தமக்குப் பிடித்த சிலரை மந்திரியாக நியமிக்கின்றார். இது ஏறத்தாழ எதேச்சாதிகாரமானதே. பல சமூகத்தவரும், சமயத்தவருமுள்ள இலங்கையைப் போன்ற ஒரு நாட்டுக்கு இம்முறையை ஜனநாயகமென்று கூறுவதற்கில்லை.

முதல்முதலாக டொனமூர் அரசியலின்படி ஏழு அமைச்சர்களில் மூவர் சிங்களவரல்லாதவர்கள். கமிட்டிகளே அவர்களை மந்திரிகளாகத் தெரிவுசெய்தன. அதில் பிரதமமந்திரி இல்லை. மந்திரிகள் சபைத் தலைவர்தான் உண்டு. அடுத்தமுறை ஒரு கணித நிபுணர் கூறிய ஏற்பாட்டின்படி எல்லா மந்திரிகளும் சிங்களவர்களாகவே இருந்தனர். என்றாலும் இதனால் கமிட்டி முறை கேடானதென்று கூறிவிடமுடியாது. இவ்வித கணக்குமுறையால் எல்லாச் சமயங்களிலும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களையே மந்திரிகளாகத் தெரிவு செய்வரென்று கூறுவதற்கில்லை. எப்படியும், ஆட்சி அதிகாரம் ஒரு சமூகத்தவரின் கையிலேயே குவியும் ஆபத்து, பிரதமமந்திரி முறையைவிட கமிட்டி முறையில் குறைவேயாகும்.

கமிட்டி முறைப்படி, தமிழர்கள் அமைச்சர்களாக கமிட்டிகளால் தெரிவுசெய்யப்படக்கூடும். பிரதமமந்திரியின் கயவிலை நியமிக்கப்

எப்படிச் செய்வதென்பது வழிமுறையைப் பற்றியது. அரசியல் நிர்ணயசபைமூலம் இதைச் செய்வதா அல்லது வேறுவகையிலா என்பது சிந்திக்கவேண்டியதொன்று. கமிட்டிமுறையாலன்றி வேறுவகையாய் தமிழரும் இந் நாட்டிலே சரிநிகர்சமானமாக வாழமுடியுமாயின் அதைப்பற்றியும் ஆலோசனை செய்யலாம். இதில் முக்கிய விஷயம் என்னவெனில் இப்போதுள்ள முறையில் மாறுதல் அவசியம் விரும்பத்தக்கதென்பதுதான்.

ஆனால் இப்போது பிரதமராகவுள்ள திரு. டட்லி சேனநாயகாவும், காலஞ்சென்ற அவரது தந்தையாரும் 'கபினெட்' ஆட்சிமுறையை பலமாக ஆதரிப்பவர்கள். அனுராதபுரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் மகாசங்கத்தைச் சேர்ந்தவர்கள், கட்சி அரசியல் முறையை மாற்ற வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தபோது, அதை பிரதமர் டட்லி ஒப்பவில்லை. ஆனால் நாட்டிலே சிங்களவருள்ளிட்டு, பெரும்பாலான சமூகத்தவரும், கட்சி முறையை மாற்றி கமிட்டி முறையை ஏற்படுத்தவிரும்பினால் அந்தக் கருத்தைப் பிரதமர் ஆதரிக்கக் கூடும். பொது மக்களின் கருத்துக்குத் தக்கபடி தமது கருத்தை அவர் மாற்றிக் கொள்வாரென்பதற்கு ஓர் உதாரணம், மாவட்ட சபை விஷயத்தில் அவர் முடிவிலே மனம் மாறியதைக் கூறலாம். ஜனநாயக முறையை அவர் பின்பற்றுபவராதலால், பெரும்பான்மையோரின் கருத்தை அவர் ஆதரித்தார்.

இப்போதுள்ள கட்சி அரசியலை மாற்றி, கமிட்டி அல்லது வேறு மேலான முறையை அமைக்கவேண்டுமென்று, சிங்களவர் உள்ளிட்டு பல்வேறு சமூகத்தவரிடையிலும் விருப்பம் அதிகரித்துள்ளதால், அவர்களுடன் தமிழர்களும் சேர்ந்து இந்தமுக்கியமாறுதலுக்காக ஒத்துழைக்கவேண்

## 'இராச வைத்தியர்'



கவர்னர் ஜெனரல் சர் வில்லியம் கோபல்லாவ, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வைத்தியாச்சாரிய திரு. அ. க. குமாரசாமி ஜே.பி.க்கு கொழும்பு ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் 'இராச வைத்தியர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

வைத்தியாச்சாரிய திரு. அ. க. குமாரசாமி ஜே. பி. வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வைத்திய மேதை திரு. அப்பா வைத்தியரின் அருமைப் பேரனார். பல நூற்றாண்டுகளாக, வாழையடி வாழையாகச் சித்த ஆயுள்வேதவைத்தியத்தைப் பேணிக் காத்துப் புத்துயிர் ஊட்டி வளர்த்த சீரிய குடும்பத்தினர்.

இவர், சித்த வைத்தியத் துறையில் ஆற்றி வந்துள்ள அளப்பரும் சேவையைக் கௌரவிக்குமுகமாகப் புகழ்மிக்க 'இராச வைத்தியர்' என்ற கௌரவப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இப்பட்டம் சிங்களவரில் ஒருவருக்கும், முஸ்லிம்களில் ஒருவருக்கும், தமிழர்களின் சார்பில் இவருக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. குமாரசாமி வைத்தியத் துறையில் மட்டுமன்றி, சமய, சமூக, பொருளாதாரத்துறைகளிலும் பெருந்தொண்டாற்றி வருபவர். வட்டு-சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்கத் தாபகர். அகில இலங்கைச் சித்தாயுள்வேத வைத்தியச் சங்கத்தின் தலைமைப் பதவியைப் பதினெட்டு ஆண்டுகளாகச் சிறப்பித்து ஆக்கப் பணிகள் பல புரிந்துள்ளார், வடபகுதிச் சித்த ஆயுள்வேத வைத்தியச் சபையின் (போர்ட்) அங்கத்தவராகப் பத்துஆண்டுகளாகக் கடமை புரிந்துவருகிறார். இலங்கை ஆயுள்வேதக் கவுன்ஸிலில் தொடர்ந்து ஆறாண்டுகள் அங்கத்துவம் வகித்துவருகின்றார்.

யாழ். மாநகரசபையாரால் நடாத்தப்பட்டுவரும் ஆயுள்வேத வைத்தியசாலையில் 14 ஆண்டுகள் வேதனம், பிரயாணச் செலவு எவையும் வேண்டாது 'விசிற்றிங்' டாக்டராகக் கடமையாற்றியுள்ளார். வட்டுக்கோட்டை ஊர் மன்றத்தில் 16 ஆண்டுகள் உறுப்பினராக இருந்து தமது பிரிவுக்கும், வட்டுக்கோட்டைக்கும் தொண்டுகள் பல புரிந்தவர். வட்டுக்கோட்டைக் கிராம முன்னேற்றச் சங்கம், காந்திஜி சனசமூக நிலையம் என்பனவற்றின் தலைவராகப் பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வருகிறார்.

நாடனைத்தும் நல்லவர் என்று புகழ, நேர்மை வழி நின்று வாழ்ந்து வருகிறார்.

### வரவேற்பு

சித்தன்கேணி, புதன்

அகில இலங்கைச் சித்தாயுள்வேத வைத்தியச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், வடபகுதிச் சித்தாயுள்வேத வைத்தியச் சபையின் அங்கத்தவருமான வைத்தியாச்சாரிய திரு. அ. க. குமாரசாமி ஜே. பிக்கு இலங்கை அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட 'இராச வைத்தியர்' என்ற கௌரவப் பட்டம் கவர்னர் ஜெனரல் சர் வில்லியம் கோபல்லாவையால் நேற்று வழங்கப்பட்டது. இவருக்கு வட்டுக்கோட்டை மக்களாலும், வைத்தியப் பிரமுகர்களாலும் இன்று காலை யாழ்ப்பாணப் புகையிரதநிலையத்தில் வந்து சேரும்போது வரவேற்பளிக்கப்படவிருக்கின்றது.

## வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர்

— சைவப்புலவர் வ. கந்தசாமி —

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் வண்ணைநகரின் மத்தியிலேயுள்ளது. சைவமும் தமிழும் வளர்ச்சியடைய அருந்தொண்டாற்றிய நாவலர் பெருமானின் சைவப்பிரகாச வித்தியாசாலையையும்,

## "நாட்டின் அச்சாணிகள் ஆசிரியர்"

மட்டுவில், செவ்வாய்

"ஒரு நாட்டின் மறுமலர்ச்

## 'சிங்களம் படிப்பதால் தமிழ் அழிந்துவிடாது'

உடுவில், செவ்வாய்

'தமிழ் மக்கள் சிங்கள மொழியை புறக்கணித்தஒரு காலம் இருந்தது. அது மாறி சிங்களம் படிக்க வேண்டுமென்ற புதிய ஊக்கம் இன்று பிறந்துள்ளது வரவேற்கக்கூடியது தமிழர்கள் உத்தியோகத்திற்காக அல்ல; சாதாரண மக்களுடன் ஒன்றுகலந்து பேசி ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவாவது சிங்களம் படிப்பது அவசியம். சிங்களம் படிப்பதால் நாம் சிங்களவராகியோ அல்லது தமிழ் அழிந்தோ விடும் என்றோ கூறமுடியாது.'

உடுவில் மான் ஆங்கில பெற்றோர் ஆசிரியர் வருடாந்தக் கூட்டத்தில் பேசிய திரு வி. பரிபூரணானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படிவருடாந்தக் கூட்டம் அதேபாடசாலை மண்டபத்தில் திரு கந்தையா தலைமையில் நடைபெற்றது. திரு ரி. தேவராஜன் உரையாற்றுகையில் சிங்களமொழிஒரு சகோதரமொழி. எமதுவியாபாரப் பொருட்களை சிங்கள மக்களுக்கு விற்கவோ அவர்களிடமிருந்து பெறவோ சிங்களத்தை அவசியம் படித்தாகவேண்டும். முதியோர் போக எதிர்கால இளைஞர் வாழவேண்டுமானால் சிங்களம் படித்தேயாகவேண்டும் என்று கூறினார்.

சிங்களம் தமிழ் பாடசாலைகளில் படிப்பிப்பதை பெற்றோர் வரவேற்கிறார்களா என்பதை அறிய அரசாங்கம் பெற்றோர்தினவிழாவில் அதை தெரிவிக்குமாறு சகல தலைமையாசிரியர்களையும் கேட்டிருந்தது. இதற்குச் சாதகமாக சிங்களம் படிக்க வேண்டுமென்ற கோரிக்கை இக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படி பாடசாலைக்கு ஒரு விளையாட்டு ஆசிரியரும், வர்த்தக தொழில் ஆசிரியரும் வேண்டுமென கல்வி இலாகாவை கோருவது என்றும் பெண்களுக்கு வீட்டுப் பணி கற்பிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெற்றோர் ஆசிரியர்சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஆர். வைபீச்; உப தலைவர்கள்; திரு கந்தையா, திரு வி. சுப்பிரமணியம்; இணைக் காரியதரிசிகள்: திரு முத்தையா, திரு தம்பையா; தனதிகாரி திரு என். ஜோகராசா. மேலும் ஐவர் அடங்கிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது,

## "பதவி உயர்ச்சியில் சேவை மூப்புக்கு முக்கியத்துவம் வேண்டும்"

யாழ்ப்பாணம். புதன்

'பதவிஉயர்ச்சியில் சேவை மூப்புக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். 45 வயதுக்கு மேல் எக்காரணம் கொண்டும் பதவி உயர்ச்சி பெற்றாலும்சரி, வெளி மாவட்ட மாகாண மாற்றங்கள் இருக்கக்கூடாது'

மேற்கண்டகோரிக்கையை யாழ்ப்பாணத் தமிழ் ஆசிரியர் சங்க ஆதரவில் இன்று நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் யாழ் எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் சமர்ப்பிக்கவிருக்கிறார்கள். இக்கோரிக்கைகள் குறித்துநடவடிக்கைமேற்கொள்ளும்படியும் கோருவர். மற்றும் சில கோரிக்கைகள் வருமாறு;-

0 யாழ்ப்பாணத்தமிழாசிரியர் சங்க இடப்பரப்பில் 11 தலைமையாசிரியர் இடங்களும் 41 உதவியாசிரியர் இடங்களும் தற்போது காலியாகஉள்ளன. இவ்விடங்களும் 1-1-70வரை மாணவர்

### நன்றி பாராட்டுதல் கடமை

கோப்பாய், செவ்வாய்

இம்மாதம் 28ம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் சுவாமி விபுலானந்தரின் சிலை திறப்பு விழாவைக் குறித்த பாராட்டுச் செய்தி யொன்றை காரைதீவு கி ச தலைவர் திரு எம் பரசுராமனுக்கு கோப்பாய் திருவருள் தவநெறிமன்றம் அனுப்பிவைத்துள்ளது.

தமிழர்கள் இலங்கையின் எப் பகுதியில் வாழ்ந்தாலும் சுவாமி விபுலானந்தர் தமிழுக்கும் தமிழ் கலாச்சாரத்துக்கும் தமிழ் மக்களுக்கும் செய்தசேவைக்காக, அவருக்கு நன்றிபாராட்ட வேண்டியது கடமையெனவும், சுவாமி விபுலானந்தருக்கு எடுக்கும் விழாவும்-சிலையும் உலக மக்களனைவரும் அவருடைய சேவையை நினைவு கூரும் வண்ணம் செய்துள்ளதெனவும் அச்செய்தியில்

## ஐயாறன் எழுதுவது

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நாளை 25-ந் திகதி இரத்மலானை விமான நிலயத்துக்கு, ஈழத்திலே காந்தி நூற்றாண்டுவிழாவில் கலந்து கொள்வதற்காகப் பறந்து வருகிறார். 25, 26-ம் திகதிகளில் கொழும்பிலே பல கூட்டங்களில் பேசுவதாகவும், அக்கூட்டங்களுக்கு அன்பர்கள் திரண்டு வந்து சுவாமிகளின் பேச்சைக் கேட்பதுடன், விரும்பியவர் சம்பத்துதானமும் (நிதிஉதவி) செய்யலாமென்று, கொழும்பு காந்தி சேவா சங்கத்தார் ஒருதுண்டுப் பிரசுரமூலம் கேட்டுள்ளனர்.

அடிகளார் பன்முறை ஈழத்துக்கு வந்தவர்கள். என்றாலும் தமிழக மேல் சபை உறுப்பினரானபின், அவர் இங்கு வருவது இதுவே முதல் முறை. துறவிகள் சட்டசபைகள்மூலம் பொதுத் தொண்டு செய்வதில் தவறில்லை. இதற்கு மாறாக இது பெரிதும் வரவேற்கத்தக்கது. அவர்கள் தேர்தல் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதென்பது கஷ்டம். ஆகவே பல சமயத் துறவிகளையும் இலங்கையிலும் செனேட் சபையில் நியமித்து, அவர்களது மேலான யோசனைகளையும் உதவியையும் பெறுவது பயனுள்ளதாக இருக்கும். தமிழகத்தின் இந்த முன்மாதிரியை, ஈழமும் சீக்கிரத்தில் பின்பற்றுமென்றே நம்புவோம்.

0 0 0

தமிழகத்திலே மதுவிலக்கை ரத்துச் செய்யப்போவதாகவும், அநேகமாக தீபாவளியன்று, கள்ளுக்கடைகள் திறக்கப்படலாமென்றும் ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையாயின் காந்தி நூற்றாண்டுவிழா நடைபெறும் இச்சமயம், தமிழக அரசு இவ்விதம் செய்வது மிகவும் வருந்தத்தக்கது. அண்ணா உயிருடன் இருந்திருப்பின் நிச்சயம் இதற்குச் சம்மதித்திருக்கமாட்டார்.

மதுவிலக்கால் தமிழகத்துக்குப் பல கோடி ரூபாய் வருமானம் குறைகிறதுதான். இந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்காகத்தான் ராஜாஜி, விற்பனை வரியைப் புகுத்தினார். அந்த வரிமூலம் இப்போது தமிழகத்துக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கின்றதாம்

அப்படியிருந்தும் தமிழக முதலமைச்சர்போதிய நஷ்டஈடுதராவிடில், மதுவிலக்கை ரத்துச் செய்துவிடுவோமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். 'ஆனந்தவிகடன்' இதுபற்றி நல்லதோர் 'கார்ட்டூன்' படம் வெளியிட்டுள்ளது. முதல் அமைச்சர் கருணாநிதி ஒரு கையில் கோப்பையும், மறுகையில் சாராயப்போத்தலும் வைத்துக் கொண்டு 'செலவுக்குப் பணம் கொடு இல்லாவிட்டால் குடிப்பேன்' என்று பக்கத்தில் திகைத்து நிற்கும் பிரதமர் இந்திராவிடம் கேட்கின்றார்.

தமிழகத்திலே தி. மு. க. வின் மதிப்பு இதனால் நிச்சயம் உயர முடியாது.

0 0 0

காந்தி நூற்றாண்டுவிழா நடைபெறும் இவ்வாண்டிலே மகாத்மா அவதரித்த கூர்ஜா ராஜ்யத்திலே வகுப்புக் கலவரம் ஏற்பட்டு 350 பேருக்கு மேல் மாண்டுள்ளனராம். சேதங்கள் மிக அதிகம். வகுப்பு ஒற்றுமைக்காக உயிர் தியாகம் செய்த மகாத்மா இதைக் கண்டிருப்பின் அவர் மனம் என்ன பாடுபடும்.

வடஇந்தியாவிலே ஒரு நகரசபைத் தேர்தலில் ஒரு ஹரிஜனரும் போட்டியிட முன்வந்துள்ளதையிட்டு அங்கு ஆத்திரத்தால் பல ஹரிஜனங்களைப் பலிவாங்கியுள்ளனராம்.

மகாத்மாவின் ஆக்க திட்டங்களிலே முக்கியமானவை வகுப்பு ஒற்றுமை, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிபு இவை மூன்றும் அவரது நூற்றாண்டு விழாவிலே இந்தப் பாடுபடுகிறது. தமிழகமாவது நல்வழி காட்ட முடியாதா?

0 0 0

உறுகயிறூசல்போல் ஒன்றுவிட்டொன்று பற்றி, மறுகயிறூசல் போல வந்து வந்துலவு நெஞ்சம், பெறுகயிறூசல் போலப் பிறை புங்குசடையாய்ப் பாதத்து, அறுகயிறூசலானேன் அதிகைவீரட்டனீரே.

- அப்பர்சுவாமிகள்

### 25பேருக்கு காணிகிடைக்கும்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய்தெற்குக்கிராம சேவையாளர் பிரிவில்காணி

### பாவனைக்குதவாத கூப்பனரிசி

பண்டத்தரிப்பு, செவ்.

இப்பகுதிகளில் நிலவிவரும் திடீர் வயிற்றோட்டத்துக்கு கடந்த வாரம் விநி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்து, பிரதமமந்திரி முறையைவிட கமிட்டி முறையில் குறைவேயாகும்.

கமிட்டி முறைப்படி, தமிழர்கள் அமைச்சர்களாக கமிட்டிகளால் தெரிவுசெய்யப்படக்கூடும். பிரதமமந்திரியின் தயவினுல் நியமிக்கப்படத்தேவையில்லையாகையால், மந்திரிகள் அதிக சுதந்திரமாகக் காரியம் செய்யலாம். இப்போதுள்ள 'கபினெட்' ஏற்பாட்டில், ஒரு தமிழர் கூட அமைச்சராக இல்லாது போனது, தமிழ்ச் சமூகத்தின் அரசியல் பலவீனத்தையும், பிறருக்கு அடங்கி இருக்கவேண்டியிருப்பதையும் காட்டுகின்றது. தமிழர்கள் மந்திரிப்பதவியைப் பற்றி கவலைப்படவில்லை என்று கூறுவது விவேகமாகாது. அப்படியாயின் அவர் பார்லிமெண்டிலோ, செனட்சபையிலே அங்கத்தவர்களாக இருக்கவும் தேவையில்லை. முக்கிய விஷயம் என்னவென்றல் அரசாங்கத்திலே ஒவ்வொரு இலாகாவிலும், அமைச்சுகளிலும், இரு சபைகளிலும், சுப்ரீம்கோர்ட்டு, உள்ளிட்டு பல நீதிமன்றங்களிலும் அவ்வப்போது அரசாங்கத்தில் சட்டமூலம் அமைக்கப்படும் ஸ்தாபனங்களிலும், கமிஷன்களிலும், தமிழர் அங்கம்வகித்து ஆட்சி முறையை நடத்திவைக்கும் கடமையையும் உண்மையையும் பெறவேண்டியதாகும்.

விரும்பத்தக்க இந்த மாறுதலை அரசியல் அமைப்பில் முறையை அமைக்கவேண்டுமென்று, சிங்களவர் உள்ளிட்டு பல்வேறு சமூகத்தவரிடையிலும் விருப்பம் அதிகரித்துள்ளதால், அவர்களுடன் தமிழர்களும் சேர்ந்து இந்தமுக்கியமாறுதலுக்காக ஒத்துழைக்கவேண்டும். செல்வாக்குள்ள சிலர் கட்சி முறையை மாற்றி கமிட்டி முறையைப் புகுத்த விரும்பாவிடினும் கூட பொதுமக்கள் அபிப்பிராயம் அதற்குச் சாதகமானுல், தலைவர்களும் பொதுமக்களின் கருத்தை ஆதரிக்க வேண்டியே இருக்கும். தமிழ்த் தலைவர்களும் சமூகத்தவரும், இலங்கை அரசியலில் இந்த முக்கிய மாறுதலை விரும்பும் மற்றத் தலைவர்களுடனும், சமூகத்தவருடனும் சேர்ந்து உழைக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. இந்த மாறுதலைப் பற்றிய, சாதகபாதகங்களைப் பற்றி இங்கு பூரணமாக விவாதிக்கவில்லை. ஆனுல் எப்படியும் ஒரு மாறுதல்வேண்டும் என்பதையும், முயன்ருல் அது சாத்தியமே என்பதையும் அறிவுறுத்துவதே இத் தலையங்கத்தின் நோக்கமாகும்.

## சிரமதானம்

வேலணை, செவ்வாய்

யாழ். திருநெல்வேலிசைவ முன்னேற்றக் கழகத்தினுல் கந்தர்மடம் ஆலடிச் சந்தியில் உள்ள வைரவர் ஆலயமும் அதன் வீதிகளும் சிரமதான இயக்கமூலம் சுத்திகரிக்கப்பட்டன.

## காந்தி புகழ்க்கீதம்

—நயினை நா. க. சண்முகநாதபிள்ளை—

எடுப்பு

உனைப்போல் ஒரு உத்தமன் உண்டோ—
மகாத்மா
அணைத்தே உலகை அஹிம்சையால் வென்ருய்—
(உனை)

தொடுப்பு

சொல், செயல், எண்ணங்கள் தூய நெறிபரப்ப
நல்வினை செய் நடு நாயகமே காந்தி (உனை)

முடிப்பு

போர் பந்தர் உதித்து நற் புகழ்தங்கு அன்னை
பொருள் தங்கு கட்டளை புரிந்து போற்றியே
பார் எங்கும் பாரதப் பண்பினை வளர்த்தவா
பக்தியாற் சத்திய சோதனை வென்றவா.
(உனை)

வீட்டிற்கு வீடு இராட்டினம் சுற்றிட
வீதி யெல்லாம் கதர் விற்பனையாகிட
நாட்டினித் தேசிய நல்லுணர் வோங்கிட
நாலுமுத்தழதோடு நற்தொண்டுபுரிந்தாய்
(உனை)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

— சைவப்புலவர் வ. கந்த... —

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் வண்ணைநகரின் மத்தியிலேயுள்ளது. சைவமும் தமிழும் வளர்ச்சியடைய அருந்தொண்டாற்றிய நாவலர் பெருமானின் சைவப்பிரகாச வித்தியாசாலையையும், வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலையும் அண்மையாகக் கொண்டு இக்கோவில் விளங்குகின்றது.

பல வருடங்களுக்கு முற்பட்ட கோவில் இது இங்கு அடியார்களுககுவேண்டியனவற்றை வேண்டியாங்கு அளித்துககற்பகதருப்போல அருள் சுரந்து வருகின்ருர் ஸ்ரீ கற்பகவிநாயகர்.

இவ்வாலயத்தின் நிர்வாகத்தைப் பரிபாலித்து வருவதற்குதர்மபரிபாலனசபை நிறுவப்பட்டுள்ளது, இச்சபை 30 வருடங்களாகப் பணிபுரிந்து வருகின்றது. குறிக்கப்பட்ட காலங்களில் பூசையும், விழாக்களும் ஒழுங்காக நடைபெறுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் அவர்கள் முதன் முதல் இவ்வாலயத்திலேயே இராமாயணப்பிரசங்கத்தை நிகழ்த்தினுர்கள். இன்றும் தமது சேவையைப் புரிந்து வருகின்றனர். சுவாமிகளின் அரும்பெரும் முயற்சியினுலேயே இவ்வாலயத்திற்கு எழுந்தருளி விநாயகர்ஒன்று உருவாக்கப்பெற்றது.

எவ்வித வீண் ஆடம்பரங்களுமில்லாத இவ்வாலயத்தில் திருமுறைகளுக்கே முக்கிய இடம் கொடுக்கப்பட்டு வருகிறது. நாயன்மார் குருபூசை, நாவலர்குருபூசை, திருவள்ளுவர்குருபூசை என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. பண்டிதர் உயர் திரு. த. மு. இரத்தினேஸ்வர ஐயர் இவ்விநாயகர் மீது ஊஞ்சல் பாடியுள்ளார். ஒருபாட்டை ஈண்டுதருவாம்.

திருத்தகுசீர் நால்வேதங்
காலக ளாகத்
திகழவுள வேதாங்கஞ்
சட்டமாக
வருத்தமுள வுபநிடதம்
விட்டமாக
வறுபாஞன் காயகலை
கயிறதாக
நிருத்தனருளாகமே
பலகையாக
நிலவியமா மறைச்
சிரமே பீடமாகக்
கருத்தமை சாந்தையர்
மடத் திருக்கோயிற்கற்
கற்பக விக்கினராச
வாடீ ருஞ்சல்

நாளை வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதித் திருவிழாவான தீர்த்த உற்சவம் நடைபெறுகிறது. தம்பிரான் சுவாமிகளின் கதாகாலட்சேபமும் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

## "நாட்டின் அச்சாணிகள் ஆசிரியர்"

மட்டுவில், செவ்வாய்

"ஒரு நாட்டின் மறுமலர்ச்சிக்கு அச்சாணி போன்றவர்கள் ஆசிரியர்கள். இளைப்பாறிச்செல்லும் ஆசிரியர் திரு. மகாலிங்கத்தின் சேவையை மறக்கமுடியாது" என்று மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற தலைமையாசிரியர் திரு. எஸ். மகாலிங்கத்தின் பிரியாவிடைக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் கூறினுர்.

தற்போதைய தலைமையாசிரியர் திரு. அ. பரமநாதன் பிரிவுபசார விழாவுக்குத் தலைமைவகித்தார். பெற்ருர்-ஆசிரியர் சங்கச் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில் "ஒரு நாட்டின் முதுகெலும்பே ஆசிரிய உலகம் தான். நாட்டின் பொறுப்பு மிக்க பதவிகளை வகிப்பவர்களும் இந்த ஆசிரியர் உலகந்தான் எனவே நமது நாட்டின் விலைமதிப்பற்ற இரத்தினங்கள் ஆசிரியர்கள் என்றே சொல்லலாம்."

முன்ஞள் கிராம சபைத் தலைவர் திரு. கே. சுப்பிரமணியம் பேசுகையில் உருவாகிக்கொண்டிருக்கும் எமது எதிர்கால சமுதாயம் நல்ல வழியிலே சென்று நல்ல வழியிலே நின்று உயர்வான செயல்களில் ஈடுபட ஓர்எடுத்துக்காட்டாக அமைவதற்கே இப்படியான விழா நடாத்துவதாகக் கூறினுர்.

## 'அவருக்கே அந்தப்பெருமை'

"கம்புறுபிட்டியா, செவ்.

இந்நாட்டில்கைத்தொழில் ஆக்கததை ஆரம்பித்து வைத்த பெருமை காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவையேசாரும்."

கம்புறுபிட்டியா தொகுதியில் நடைபெற்ற பண்டாரநாயக்கா ஞாபகார்த்ததினக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அக்குறச ஆட்சிமன்ற அங்கத்தவர் டாக்டர் எஸ். எ. விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'திரு. பண்டாரநாயக்கா சகல விதத்திலும் மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக வாழ்ந்தவர்.' என இக்கூட்டத்தில் பேசிய கொலனுவ ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ரி. பி. இலங்கரத்ன குறிப்பிட்டார்.

...ரும் சில கோரிக்கைகள் வருமாறு:-

0 யாழ்ப்பாணத்தமிழாசிரியர் சங்க இடப்பரப்பில் 11 தலைமையாசிரியர் இடங்களும் 41 உதவியாசிரியர் இடங்களும் தற்போது காலியாகஉள்ளன. இவ்விடங்களும் 1-1-70வரை மாணவர் வரவுச் சராசரி கூடுவதால் உண்டாகும்இடங்களும் ஆசிரியர்கள் இளைப்பாறுதல், விலகுவதனுல் காலியாகும் இடங்களும் கணக்கிட்டு 1-1-70க்குப்பிந்தாமல் நிரப்பப்படவேண்டும்.

0 ஒருவட்டாரத்தில் ஆசிரியர் பற்ருக்குறையாவும்நிரப்பப்பட்ட பின்னரே அவ்வட்டாரத்திலிருந்து பிற இடங்களுக்கு ஆசிரியர்கள் மாற்றப்படவேண்டும்.

0 ஆசிரியர்களது வைத்திய லீவுகள் மற்ற மாகாணங்களிலிருப்பதுபோல், இம்மாகாணத்திலும் 30 நாட்களாக இருக்கவேண்டும்.

0 பாடசாலைப் பரிபாலனச் செலவினங்கள்மாணவர் தொகைக்குத் தக்கதாகவும் அத்தியாவசிய தேவைகட்குத் தகககதாகவும் வழங்கப்படவேண்டும்.

0 தற்போது எல்லாப் பாடசாலைகளிலுமுள்ள 6ம், 7ம் வகுப்புப்பிள்ளைகட்குஅரசினரால் பொதுப்பட்ட பரீட்சைகள் நடந்துவருகின்றன. சில பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் படிப்பிக்க ஆசிரியர்கள் இல்லாததினுல் அப்பிள்ளைகளின்தரம் பாதிக்கப்படுகின்றது. ஆகவே இப்பாடங்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்களை எல்லாப் பாடசாலைகட்கும் நிரந்தரமாகவோ, பகுதிநேர ஆசிரியர்களாகவோ பகிர்ந்து நியமித்து எல்லா மாணவர்கட்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

ஐக்கிய முன்னணிக்கு

## பிரதமர் அழைப்பு

யாழ்ப்பாணம், புதன்

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இம்மாதம் 27-ந் திகதி தம்மைச் சந்திக்குமாறு அவசரத்தந்தி மூலம் கேட்டுள்ளார்.

சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்னைபற்றி ஆலோசனையொன்று நடத்துவதற்காகவே பிரதமர் அழைத்துள்ளாரெனத் தெரிகிறது. இதுபற்றி ஆலோசிக்க நிர்வாகசபையினர், தலைவர் முன்னுள் செனட்டர் திரு. ஜி. நல்லையா தலைமையில் கூடவிருக்கின்றனர்.

...செய்த சேவைக்காக, அவருக்கு நன்றிபாராட்ட வேண்டியது கடமையெனவும், சுவாமி விபுலானந்தருக்கு எடுக்கும் விழாவும்-சிலையும் உல... மக்களனைவரும் அவருடைய சேவையை நினைவு கூரும் வண்ணம் செய்துள்ளதெனவும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## அப்பீல்செய்வார்

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். ஜெயராமச்சந்திரலிங்கம் என்பவர் கடந்த தைமாதம் 16-ந் திகதி பொலிசாரிடமிருந்து கள்ளக் கடத்தல் சேலைப்பார்சல் ஒன்றைப் பறித்து எடுத்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது எதிரியைகுற்றவாளியாகக்கண்ட மாஜிஸ்திரேட் அவருக்கு 9 மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். எதிரி அப்பீல் செய்வதற்கு விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவரது அப்பீல் மனுவை ஏற்றுக்கொண்ட மாஜிஸ்திரேட் ரூபா 3000 பிணையில் செல்வதற்கு அவரை அனுமதித்தார்.

## நன்கொடைகிடைத்தது

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் கைதடி கிராம சபைத் தலைவர், உபதலைவர், 6-ம் வட்டார உறுப்பினர் ஆகியோர்உள்ளூராட்சி அமைச்சரை நேரில் சந்தித்ததன் விளைவாக கல்லாகம் சுடலை வீதி திருத்துவதற்கு விசேட நன்கொடை கிடைத்துள்ளது. மேலும் கிராம சபையின் புதிய கட்டிடம் அமைப்பதற்கும் நன்கொடை. கிடைக்கலாம் எனத் தெரியவருகிறது.

## கப்பல்திருவிழா

உடுப்பிட்டி, செவ்வாய்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் கப்பல்திருவிழா இம்மாதம் 26-ந் திகதி நடைபெறவுள்ளது.

## யுவதியை காணவில்லை

உடுப்பிட்டி, செவ்.

கரணவாய் தெற்கு கல்லுவம் நொத்தாரிசு வட்டம் என்னுமிடத்தைச் சேர்ந்த மாணிக்கம் சின்னத்தம்பி தமது 19 வயதுடைய மகள் திடீரெனக் காணமல்போய் விட்டதாகப் பொலிசில் முறையிட்டுள்ளார்.

...செய்வதற்காகத்தான் ராஜாஜி, விற்பனை வரியைப்

## 25பேருக்கு காணிகிடைக்கும்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய்தெற்குக்கிராம சேவையாளர் பிரிவில்காணியற்ற விவசாயிகளுக்கும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் அதிர்ஷ்டம் அடித்து உள்ளது இப்பகுதியில் நிலமற்றவர்களுக்குக் காணிகள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அவசரகால உணவுற்பத்திதிட்டத்தின் கீழ் இக்குடியேற்றத் திட்டத்தில் காணிகள் வழங்கப்படும்கரணவாய் தெற்கு கப்பூது என்னுமிடத்திலுள்ள 'இறந்துபிட்டி' என்னும் காணியே வழங்கப்படவிருகின்றது.

ஒருவருக்கு ஒரு ஏக்கர் வீதம் நிலமற்ற 25 பேருக்கு இந்நிலம் பகிர்ந்தளிக்கப்படும்,

## தொகுதிகள்யாவும் சமம்

மீரிகம, செவ்வாய்

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் எல்லாத் தொகுதிகளையும் ஒரேமாதிரிக்கருதி அவைகளுக்கு நன்மை செய்கிறது. எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் தொகுதிகளென்பதற்காக எவ்வித வேறுபாடும் காட்டுவதில்லை. அபிவிருத்தித் திட்டங்களை எமது அரசாங்கம் கொண்டுவரும்போதும் அவைகளைச் செயல்படுத்தும் போதும் சகல தொகுதிகளையும் ஒரேமாதிரியே கவனிக்கிறது என பத்தேவியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் உரையாற்றிய ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தன கூறினுர்.

## எம் பிக்கு பாராட்டு

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் எம் பி திரு. சி கதிரவேலுப்பிள்ளையின் தனித் தமிழபிமானத்தை கோப்பாய் தமிழரசுக் கட்சிக் கிளை பாராட்டியுள்ளது. தமிழ் இணைப் பிரதியின்றி அரசாங்கத்தில் இருந்தோ அன்றித்தனியார்ஸ்தாபனங்களிலிருந்தோ தனக்குவரும் எவ்வகையான அழைப்புக்களையும், கடிதங்களையும் திரு. கதிரவேலுப்பிள்ளை நிராகரித்து திருப்பி அனுப்பி வருவது பாராட்டத்தக்கது எனவும், இந்த முன்மாதிரியை சகல தமிழ் எம். பிக்களும் பின்பற்றுதல் அவசியம் எனவும் மேற்படிகிளை கேட்டுள்ளது

...அறிகைவரட்டவரே.

- அப்பர் சுவாமிகள்

## பாவனைக்குதவாத கூப்பனரிசி

பண்டத்தரிப்பு, செவ்.

இப்பகுதிகளில் நிலவிவரும் திடீர் வயிற்ருேட்டத்துக்கு கடந்த வாரம் விநியோகிக்கப்பட்ட கூப்பன் அரிசி காரணமா என்ற சந்தேகம் மக்களிடையே எழுந்துள்ளது. கடந்த வாரம் விநியோகிக்கப்பட்ட வெள்ளைப் பச்சையரிசி பாவனைக்குதவாத விதத்தில் புழுக்களுடன் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## 5 மாதம் சிறை

### மனைவிக்கு ஜீவனும்சம் கட்டத்தவறினுர்

வல்வெட்டிதுறை, செவ்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த ந தவரத்தினம் என்பவர் தனது மனைவி சந்தானலட்சுமிக்கு ஜீவனும்சப்பணமாக ரூபா 285 கட்டத்தவறிய குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிதிரேட் திரு. க. விக்னராசாவால் 5மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## 'பஸ்சேவையை விஸ்தரிக்கவும்'

வேலணை, செவ்வாய்

வேலணை கிழக்கு மக்களின் பிரயாண வசதியை முன்னிட்டு பஸ்சேவையை செட்டிபுலம்வரை விஸ்தரிக்கவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களைக்கோரும் தீர்மானம் வேலணை கி. ச. மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## திருட்டு

உடுப்பிட்டி, செவ்.

கரணவாய் தெற்கு கப்பூது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நள்ளிரவில் கதவுடைத்துத் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளது. புடைவைகள், பால்டின் மற்றும் பொருட்கள் களவாடப்பட்டனவாம்.

பருத்தித்துறைப் பொலிசார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர். கைரேகை நிபுணர்கள் கைவிரலடையாளம் எடுத்துச் சென்றுள்ளனர்.

## உபதபாலதிபர் நியமனம்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை உபதபாற்கந்தோர் அதிபர் திரு. எஸ். நாகரத்தினம் ஒய்வு பெற்றதைத்தொடர்ந்து அவருக்குப்பதிலாக திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளை நியமனம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org